வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959    Reg. No. : P . 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu    ඊළනාඩු




Email : news@eelanadu.lk    மலர் : 04    26.09.2023 செவ்வாய்க்கிழமை    இதழ் : 290    பக்கங்கள் : 12

# சிங்கள பாடசாலைகளை அருகில் உள்ள தமிழ் பாடசாலைகளுடன் இணைக்காதீர்!

## மனோ கணேசன் எம்.பி. கடும் எதிர்ப்பு



கொழும்பு, செப். 26

“கொழும்பு கல்வி வலயத்தில் மாணவர் தொகை குறைந்த சிங்கள பாடசாலைகளை அருகாமை தமிழ் பாடசாலைகளுடன் இணைக்கும் முயற்சியை, ‘தேசிய நல்லிணக்கம்’ என்ற பெயரில் சிலர் முன்னெடுக்க முயல்கிறார்கள். உண்மையான நல்லிணக்கம் உருவாக, வளர்ச்சியடைந்த கொழும்பு பாடசாலைகளான றோயல் கல்லூரி, இசிபதன கல்லூரி, டீ.எஸ். சேனநாயக்க கல்லூரி ஆகியவற்றில் திட்டமிட்டு குறைக்கப்படும் தமிழ் வகுப்புகளை கூட்டுங்கள். வளர்ச்சியடைந்த ஆனந்தா கல்லூரி, நாலந்தா கல்லூரி, விசாகா கல்லூரி ஆகியவற்றில் தமிழ் மொழி பிரிவுகளை ஆரம்பியுங்கள். இதன் மூலம் தமிழ் மொழி மூல பிள்ளைகளுக்கு வளர்ச்சியடைந்த நல்ல கல்வி வாய்ப்புகளை வழங்குங்கள். இதை

11

# சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் விசாரணைகளே அவசியம்!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, செப். 26

ஈஸ்டர் தாக்குதல் விடயத்தில் எதிர்க்கட்சியினரின் கொள்கையிலேயே நாட்டின் பெரும்பான்மையான மக்களும் இருக்கின்றார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தொடர்பான உண்மைகளை அறிந்துக் கொள்வதில் ஆளும் கட்சிக்கு இருக்கும் கொள்கைகளுக்கும் எதிர்க்கட்சிக்கு இருக்கும் கொள்கைகளுக்கும்

11

# முன்னாள் டி. ஐ. ஜிக்கு 5 வருட சிறை!

கொழும்பு, செப். 26

அரசியல்வாதியான பிரேமலால் ஜயசேகரவை கைதுசெய்ய வேண்டாம் என அழுத்தம் கொடுத்த குற்றச்சாட்டில் சப்ரகமுவ மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங்கவுக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங்கவுக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றம் 5 வருட சிறைத் தண்டனை விதித்து நேற்று தீர்ப்பளித்துள்ளது.

இந்த தண்டனையை வழங்கும்போது பிரதிவாதி 20,000 ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

11

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து

# சர்வதேச விசாரணை அவசியமானது அல்ல!

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ‘பல்டி’ கருத்து



கொழும்பு, செப்ரெம்பர் 26

**உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியமில்லை என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

எம்பிலிபிட்டி பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பில் அரசியல் தலையீடு இன்றி சுயாதீன விசாரணை நடத்தினால் போதுமானது எனவும் கர்தினால் குறிப்பிட்டார்.

அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணிந்து, தவறு செய்தவர்களை காப்பாற்ற முயற்சிக்காது விசாரணை முன்னெடுக்கப்படுமானால் அது போதுமானது எனவும் அவர் கூறினார்.

இந்த விடயத்தில் உண்மைகளை கண்டறிய உரிய பொறிமுறைகள் ஊடாக வெளிப்படையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாயின் சர்வதேசத்தினை நாடவேண்டிய அவசியமில்லை எனவும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டார்.

(அ)

# பருத்தித்துறையில் நேற்று திலீபனின் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், செப். 26

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பருத்தித்துறையில் நேற்று மாலை அனுஷ்டிக்கப்பட்டது.

11

# புலிகளின் பொருட்களை தேடி முள்ளிவாய்க்காலில் அகழ்வு!

முல்லைத்தீவு, செப். 26

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால், கிழக்கு பகுதியில் விடுதலைப்புலிகள் காலத்தில் புதைக்கப்பட்ட பொருட்களைத் தேடி நேற்று அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த பகுதியில் இறுதிக்கட்ட யுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் தங்கம், பணம் உள்ளிட்ட சொத்துக்கள்

11

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மீண்டும் ஈஸ்டரை ஒத்த தாக்குதல்

## ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை

கொழும்பு, செப். 26

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் போன்றதொரு தாக்குதல் மீண்டும் நடத்தப்படலாம் என ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா இந்த தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

“2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதலை நடத்தியவர்கள் கைதுசெய்யப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்குப் பின்னால் இருந்தவர்கள் யாரேனும் தலைமறைவாக இருந்தால், அவர்கள் விரைவில் கைதுசெய்யப்பட வேண்டும்.

அவர்கள் சுதந்திரமாக நடமாட அனுமதித்தால் 2024 ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு இன்னொரு குழப்பத்தை உருவாக்கலாம்-என்றார்.

(அ)

# நாணய நிதியப் பிரதிநிதிகள் எதிர்க்கட்சி தலைவர் சந்திப்பு



கொழும்பு, செப். 26

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிகளின் கீழ் மேற்கொள்ளப்படும் மீளாய்வு கலந்துரையாடலின் முதலாவது மீளாய்வின் இறுதி கலந்துரையாடலின் நிமித்தம் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், எதிர்க்கட்சித் தலைவரை நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் பொருளாதார, சமூக, அரசியல் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

11

## இப்படியும் நடக்கிறது

கடந்த ஆண்டு, அறகலய ஏற்படுத்திய கலகத்தைத் தொடர்ந்து ராஜபக்ஷக்களின் அரசியல் முடிந்து விட்டது என்று நம்பப்பட்டது.

இப்படித்தான் முன்னரும் ஒரு தடவை, அதாவது இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்து அம்பாந்தோட்டைக்கு போய்ச் சேர்ந்தபோதும் கூறப்பட்டது.

ஆனால், ஒரு சில மாதங்களிலேயே மீண்டு எழுந்த ராஜபக்ஷக்கள், மூன்று ஆண்டுகளில் நடந்த உள்ளூராட்சி தேர்தலில் அமோக வெற்றிபெற்று மீண்டு வந்தனர்.

அதேபோலத்தான், அறகலயவுக்கு பின்னர் இனி மீளமுடியாத அளவுக்கு ராஜபக்ஷ சாம்ராஜ்யம் முடிந்து விட்டது என்று கூறப்பட்டது.

ஆனால் அப்படியல்ல, அவர்களின் வீழ்ச்சி நிரந்தரமானதல்ல என்பதுபோல தெற்கில் நடக்கின்ற சம்பவங்கள் இப்போது உணர்த்துகின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று கொழும்பில் வந்திறங்கிய இந்த ஊர்க்குருவியை வரவேற்றது, கொழும்பில் காலி வீதியில் கட்டப்பட்டிருந்த பொதுஜன பெரமுனவின் கட்சிக் கொடிகள்தான்.

எதற்காக கட்டப்பட்டிருக்கின்றன என்று என்னை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த ஓட்டோ சாரதியிடம் கேட்டேன். அவர் சொன்னார், ‘மீண்டும் அவர்கள் கூட்டங்கள் நடத்தத் தொடங்கி விட்டார்கள்தானே. இங்கேயும் ஏதேனும் கூட்டம் நடக்கப் போகிறதோ தெரியவில்லை’ என்று.

அத்தோடு அவர் நிறுத்தியிருந்தால் பரவாயில்லை, தொடர்ந்து சொன்னார், ‘அவர்களிடம்தானே அப்படி செலவு செய்து கூட்டம் நடத்துவதற்கு காசும் இருக்கிறது. என்னவோ சேர், அடுத்த தேர்தலில் யார் வெற்றிபெறுவது என்பதையும் காசுதான் தீர்மானிக்கும். ஏனெனில், மக்கள் பிரச்னையோடு வாழ்கின்றபோது, அவர்களை யார் கவனிக்கின்றார்களோ அவர்களுக்குத்தானே வோட்டு போடுவார்கள்’.

ஓர் ஓட்டோ சாரதியிடமிருந்து கிடைத்த வாக்குமூலம் இது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல.

நேற்று மாலை கொழும்பில் சில தெற்கு ஊடகர்களைச் சந்தித்த போது, காலையில் ஓட்டோ சாரதியுடன் நடந்த சம்பாசனையை சொன்னேன். அவர்களும் அதனை ஆமோதிப்பதுபோல இருந்தது. கூடவே, ஒரு தகவலையும் சொன்னார்கள்.

‘கூட்டங்கள் மாத்திரமல்ல, இலத்திரனியல் ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் பொதுஜன பெரமுனவின் கட்சி விளம்பரங்களும் இப்போது ஒளிபரப்பாகின்றன’ என்றார்கள் அவர்கள்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்காக எதிர்வரும் நவம்பரில் தாக்கல் செய்யப்படவுள்ள அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கினால், அத்தியாவசிய தேவைக்கான எரிபொருளை வாங்கவே முடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்று ஐ. தே. க. தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்திருந்த கருத்து தொடர்பாக இந்தப் பத்தியில் முன்னர் பாத்திருந்தோம். அப்போது தேர்தலை ஒத்திவைக்க ஜனாதிபதி ரணில் திட்டமிடுகிறாரோ என்ற சந்தேகத்தை தெரிவித்திருந்தோம். அதனை கடந்த ஞாயிறன்று தனது பத்தியில் பனங்காட்டானும் கிளப்பியிருந்தார். ரணில் தனது மாமனார் ஜே. ஆர். ஜெயவர்த்தன செய்ததுபோல தேர்தல் இல்லாமலே ஆட்சியைத் தொடர முயன்றதுபோல அவரும் முயற்சி செய்ய யோசிக்கிறாரோ என்ற சிந்தனை வருவது தவிர்க்க முடியாததுதான். ஆனால் ஜே.ஆர். அப்போது தனக்கிருந்த ஐந்தில் ஒரு பலத்தைக் கொண்டு தான் நினைத்ததைச் செய்ய அவருக்கு முடிந்தது. ஆனால், இன்று ரணில் தனக்கிருக்கும் பலத்தைக்கொண்டு அதனைச் செய்யமுடியுமா என்பது தெரியவில்லை.

தேர்தல் இல்லாமல் பதவியில் தொடர விரும்பினாலும் அதனைச் செய்வதற்கு அரசியலமைப்பில் திருத்தம் செய்யவேண்டியிருக்கும் அத்தகைய திருத்தத்திற்கு மூன்றில் இரண்டு பலம் மாத்திரமல்ல, சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றும் தேவைப்படலாம். சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதும் தேர்தல் நடத்துவதும் அண்ணளவாக ஒரே செலவில்தான் செய்யவேண்டியது என்பதால் அதற்கும் சாத்தியமில்லை என்று வாதிடுகின்றனர் கொழும்பில் உள்ள அரசியல் ஆய்வாளர்கள்.

தேர்தல் என்பது விரும்பியோ விரும்பாமலோ ரணில் எதிர்கொள்ள வேண்டிய ஒன்றுதான். அவர் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதன் மூலம் தனது வெற்றியை உறுதிப்படுத்தலாம் என்று நம்பிக்கொண்டு தனது வேலைகளை செய்துகொண்டிருக்கிறார் என்று ஏற்கனவே இந்தப் பத்தியில் பாாத்தோம்.

அதேவேளை, பொதுஜன பெரமுன, ரணிலை தமது வேட்பாளராக முன்னிறுத்தாது என்று இப்போது பொதுஜன பெரமுனவிலிருந்தும் அறிவிப்புகள் தொடர்ந்து வெளிவருவதைக் காணமுடிகின்றது. அவ்வாறு அறிவிப்புக்களை செய்பவர்கள் பெரும்பாலும் பொதுஜன பெரமுனவில் பஸில் ஆதரவாளர்கள் என்பதும் ஒன்றும் இரகசியமானதல்ல. அதேவேளை பஸில் ராஜபக்சவின் நெருங்கிய சகாவான பிரபல தொழில் அதிபர் தம்மிக பெரேராவும் தெற்கில் தொடர்ச்சியான பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றார். அடுத்த ஜனாதிபதி தோல்தலில் போட்டியிடும் தனது விருப்பத்தை மக்கள் மத்தியில் அவர் பிரசாரமாக முன்னெடுத்து வருகின்றார்.

வர்த்தக துறையில் தான் சாதித்ததுபோல நாட்டையும் தன்னால் வளர்த்தெடுக்க முடியும் என்று அவர் தன்னை முதன்மைப்படுத்தி பிரசாரங்களை நடத்திக்கொண்டிருக்கிறார். யுத்தத்தை வெற்றிகொள்ள முடிந்த தனக்கு நாட்டை ஆளமுடியாதா என்று கேட்டுக்கொண்டு அரசியலுக்கு வந்த கோட்டாபயவால் அரசியலில் வெற்றிபெற முடியவில்லை. இதேபோல அரசியல் அனுபவமில்லாத ஒருவரிடம் மீண்டும் நாட்டை ஒப்படைக்க மக்கள் தயாராக இருப்பார்களா என்பதை அவரால் அறிந்துகொள்ள முடியவில்லை என்பது ஆச்சரியமானதல்ல.

ஆனால், பொதுஜன பெரமுனவில் பஸில் ஆதரவு வேட்பாளராக ஒருவர் களம் இறங்குவது தனக்கு சாதகமாகவே இருக்கும் என்ற ரணிலின் கணக்கும் சரியானது தான் என்கிறார் ஒரு தெற்கின் அரசியல் ஆய்வாளர்.

**- ஊர்க்குருவி.**

# இலங்கையின் மொத்தக் கடன் கணிசமான அளவு அதிகரிப்பு!

## நிதி இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 26

**டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததன் விளைவாக இலங்கை செலுத்த வேண்டிய கடனின் மொத்த தொகை கணிசமாக அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி அடைந்தமையானது கடன் நெருக்கடிக்கான பிரதான காரணங்களில் ஒன்றாகும். கடந்த ஆண்டு ஏற்பட்ட நெருக்கடியைத் தொடர்ந்து, கடனை திருப்பிச் செலுத்தக் கூடிய சூழலை உருவாக்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச அமைப்புகளின் நம்பிக்கையை வென்றெடுத்துள்ள நிலையில் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க சர்வதேச நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

நாட்டின் திவால் நிலையை அகற்றுவதற்கான மாபெரும் நடவடிக்கையாக சர்வதேச நாணய நிதியத்துடனான பணியாளர் மட்ட ஒப்பந்தத்தை ஜனாதிபதி இறுதி செய்வார்.

முன்னைய ஒப்பந்தங்களை இலங்கை மதிக்காத காரணத்தினால் சர்வதேச நாணய நிதியம் கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ள போதும் சவால்களுக்கு மத்தியில் அரசாங்கம் கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது-என்றார்.

(அ)

## போலந்து யுவதி நீரில் மூழ்கி பலி!

கொழும்பு, செப். 26

தங்காலை, மரகொல்லிய கடற்பரப்பில் நேற்று மாலை போலந்து பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்ட 22 வயதுடைய பெண்ணும் அவரது காதலனும் பிரதேச வாசிகளால் மீட்கப்பட்டு தங்காலை மருத்து வமனையில் சேர்க்கப்பட்டனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அந்த பெண் உயிரிழந்தார். (அ)

## மாலைதீவுக்கு முட்டைகள்

கொழும்பு, செப். 26

இலங்கையிலிருந்து மாலைதீவுக்கு மாதாந்தம் 1.5 மில்லியன் முட்டைகள் ஏற்றுமதி செய்யப்படுவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கன்னோருவை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அடுத்த ஆண்டுக்குள் மேலும் 4 நாடுகளுக்கு முட்டைகளை ஏற்றுமதி செய்ய பேச்சு நடத்தி வருவதாக அமைச்சர் மேலும் கூறினார்.

அத்துடன், எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் முட்டை உற் பத்தி அதிகரித்து, நாட்டில் முட் டையின் விலை குறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார்.

# கடத்தப்பட்ட பெண் மீட்பு!

கொழும்பு, செப். 26

பெண்ணொருவரை கடத்திச் சென்று வீடொன்றில் அடைத்து வைத்து கப்பம் பெற முயன்ற மேலும் இரு பெண்களை மாரவில பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொச்சிக்கடை, தலுகொடுவ பிரதேசத்தைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன் தினம் கட்டுனேரிய பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் தனது மனைவியை சிலர் கடத்திச் சென்று கொச்சிக்கடை பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து கப்பம் கோரியதாக மாரவில பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டின் பேரில், கொச்சிக்கடை பகுதியில் உள்ள வீடொன்றில் அடைக்கப்பட்டிருந்த பெண்ணை விடுவிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அங்கு, பெண்ணைக் கடத்திச் சென்று காவலில் வைத்திருந்த இரண்டு பெண்களும் கைது செய்யப்பட்டனர்.

மேலும் தொடர்புடைய நான்கு பேரை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தப்பட்ட பெண் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதால் மாரவில அடிப்படை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# சீன ஆராய்ச்சிக் கப்பலின் பயணம் அமெரிக்காவும் கவலை தெரிவிப்பு

கொழும்பு, செப். 26

சீன ஆராய்ச்சிக் கப்பலின் பயணம் குறித்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் விக்டோரியா நுலாண்ட், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை சந்தித்தபோது, கவலை தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது.

இலங்கை ஒரு நடுநிலை நாடு என்ற வகையில், தமது பிராந்தியத்தில் வெளிநாட்டு கப்பல்கள் மற்றும் விமானங்கள் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய நிலையான நடைமுறையை தாம் வகுத்துள்ளதாக அமைச்சர் அலி சப்ரி அவருக்கு விளக்கமளித்தார்.

இந்த அணுகுமுறையை அனைத்து நாடுகளுக்கும் சமமாகவே இலங்கை நடத்துகின்றது என்றும் அந்த செயன்முறையில் சீனாவை மட்டும் விலக்க முடியாது என்றும் அமைச்சர் அலி சப்ரி கூறினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா சென்றிருந்த அமைச்சர் அலி சப்ரி, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் விக்டோரியா நுலாண்ட்டை சந்தித்து கலந்துரையாடி இருந்தார்.

சீன ஆராய்ச்சிக் கப்பல் ஒக்ரோபர் மாதம் இலங்கையில் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ள நிலையில் இந்தியாவும் கடுமையான ஆட்சேபனையை எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

ஈழநாடு
Eelanadu
26.09.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 09

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# காணி அதிகாரம்

மட்டக்களப்பு மாதவணை - மயிலத்தமடு மேய்ச்சல் தரை விவகாரம் தொடர்பில் தன்னால் தலையீடு செய்ய முடியாதென்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கூறியிருக்கின்றார். மகாவலி அதிகார சபைக்கு உட்பட்ட விவகாரம் என்பதால் இந்த விடயத்தில் தன்னால் தலையீடு செய்ய முடியாதென்று ஆளுநர் தெரிவித்திருக்கின்றார். அவ்வாறாயின் புத்தசாசன அமைச்சுக்கு உட்பட்ட விகாரை விடயத்தில் அவர் எவ்வாறு தலையீடு செய்ய முற்பட்டார் என்னும் கேள்வியுண்டு. இதற்கு முன்னர் இருந்த சிங்கள ஆளுநர் மட்டக்களப்பு மேய்ச்சல் தரை விடயத்தில் சிங்களவர்களுக்கு சார்பான தலையீடுகளை செய்திருந்தார்.

ஆளுநர் விவகாரத்தை ஒருபுறமாக வைத்துவிட்டு, இந்த விடயம் எதனை வலியுறுத்துகின்றது என்பதையே நாம் கவனிக்க வேண்டும். அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென்று தமிழர் தரப்பின் பெரும்பான்மை கோரிவருகின்றது. ஒரு சிறிய தரப்பு அதில் பயனில்லையென்று வாதிட்டுவருகின்றது.

நிலைமைகளை உற்று நோக்கினால் வடக்கு - கிழக்கை மையப்படுத்தி இடம்பெற்றுவருகின்ற விடயங்கள் அனைத்துமே காணி அதிகாரத்துடன் தொடர்புபடுவதை காணலாம். விகாரைகள் கட்டப்படுவது தற்போது விவாதிக்கப்படும் மேய்ச்சல் தரை விவகாரம் - ஆகிய அனைத்துமே காணி அதிகாரத்துடன் தொடர்புபடுகின்றது. காணியை கையாளுவதற்கான அதிகாரம் மாகாண சபையிடம் இருக்குமாயின், இவ்வாறான பிரச்னைகளை இலகுவாக கையாளக்கூடியதாக இருக்கும். நூறு விகிதம் இல்லாவிட்டாலும்கூட, 70விகித பிரச்னையை கையாள முடியும்.

எஸ். ஜே. வி. செல்வநாயகம், பண்டா - செல்வா உடன்பாட்டுக்கு சென்ற காலத்திலிருந்து, வடக்கு - கிழக்கின் காணி அதிகாரத்தை தமிழர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டுமென்பதே முதன்மையான விடயமாக கொண்டிருந்தார். ஏனெனில், காணி அதிகாரம் இல்லாமல் வேறு எந்த அதிகாரம் இருந்தாலும் அதில் பயனில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் 13ஆவது திருத்தச்சட்டத்தில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்பட்டன. தமிழர் தரப்பு முன்வைத்த அனைத்து பரிந்துரைகளும் உள்வாங்கப்படாதிருந்தாலும்கூட, காணி, பொலிஸ் அதிகாரம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்னும் கோரிக்கை உள்வாங்கப்பட்டிருந்தது.

ஆனால் பின்னர், ஏற்பட்ட முரண்பாடுகளினால், இந்திய படைகள் வெளியேறியதை தொடர்ந்து, இந்தியா எட்ட நிற்கும் கொள்கையை கடைப்பிடிக்க முற்பட்டது. பின்னர், காணி, பொலிஸ் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளை தமிழர் தரப்பில் எவரும் முன்னெடுக்கவில்லை. காரணம் விடுதலைப் புலிகள் தலைமையிலான ஆயுதப் போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

ஆனால், இன்று நிலைமைகளை திரும்பிப் பார்த்தால், எல்லாவற்றை விடவும் காணி அதிகாரத்தையே முதலில் உறுதிப்படுத்த வேண்டியிருக்கின்றது. அரசியலமைப்பில் உள்ள காணி அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டாலன்றி, வடக்கு - கிழக்கை மையப்படுத்தி இடம்பெறும் காணி தொடர்பான பிரச்னைகளை தீர்க்கவே முடியாது. அவ்வப்போது வீதிகளில் நிற்பதும், பின்னர் கலைந்து செல்வதுமான அணுகுமுறைகளால் இந்தப் காணிப் பிரச்னையை நிரந்தரமாக தீர்க்க முடியாது.

இவை அனைத்துக்கும் முதலில், மாகாண சபை தேர்தல் இடம்பெற வேண்டும். காணி அதிகாரத்தை கையாளுவதற்கான விடயங்கள் முற்றிலுமாக அமுல்படுத்தப்பட வேண்டும். முதலில் காணி அதிகாரத்தை நடைமுறைப்படுத்துங்கள், பின்னர் பொலிஸ் அதிகாரம் தொடர்பில் பேசுவோமென்னும் நிலைப்பாட்டை தமிழர் தரப்பு ஒற்றுமையுடன் முன்வைக்க வேண்டும். அவ்வாறிலில்லாது, பேச்சின்போது, ஆளுக்கொரு நிலைப்பாட்டை முன்வைப்பதால், இந்த விடயங்களை கையாள முடியாது. முதலில் காணி அதிகாரம் பின்னர் மற்றையது என்னும் நிலைப்பாட்டைக் கைக்கொள்ளுவதன் ஊடாக காணிப் பிரச்னைக்கான நிரந்தர தீர்வை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும்.

# சுழிபுரத்தில் புத்தக அரங்க விழா

*யாழ்ப்பாணம், செப். 26*

*தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டையொட்டி 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் பதினான்காவது நிகழ்வு சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 01 ஆம் திகதி வரையான நான்கு தினங்கள் வியாழன், வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெறவுள்ளது.*

*28 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இப் புத்தக அரங்க விழாவின் முதல்நாள் நிகழ்வாக, பிரபல எழுத்தாளரும், அதிபருமான திருச்செல்வம் தவரத்தினத்தின் "வீரமும் விவேகமும்" என்ற சிறுவர் கதை நூல் வெளியீடு இடம்பெறவுள்ளது.*

*கல்வியியல் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளரும் ஆய்வாளருமான கலாநிதி. ந.இரவீந்திரனின் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில், நூல் வெளியீட்டுரையை எழுத்தாளரும் தேசிய கல்வி நிறுவகத்தின் ஓய்வுநிலை விரிவுரையாளருமான திருமதி. ராணி சீதரனும், நூல் மதிப்பீட்டுரையை ஆசிரியரும் ஆய்வாளருமான திருமதி பங்கயச் செல்வி யோகநாதனும் ஆற்றவுள்ளனர்.*

*தொடர்ந்து மாலை 5 மணியளவில் செம்முகம் ஆற்றுகைக் குழுவின் தயாரிப்பில், க. சத்திய சீலனின் நெறியாள்கையில் 'எலியார் எங்கே போனார் ?' சிறுவர் நாடகமும், 'கோமாளிகள்' ஆற்றுகையும், இளையோர் பேரவையின் தயாரிப்பில், கனிஷ்ரனின் நெறியாள்கையில் 'சிறுவர் அரங்காற்றுகையும்' இடம்பெறும். ஆர்வலர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)*

# சுகாதார அமைச்சர் சொன்னது பொய்!

## வைத்தியர் சங்கக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

*கொழும்பு, செப். 26*

*நாட்டில் நிலவும் போசாக்கின்மை நிலை குறித்து சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்து பொய்யானதும் பொறுப்பற்றதுமான அறிக்கை என குடும்ப சுகாதார பணியகம் வெளியிட்டுள்ள சமீபத்திய போஷாக்கு அறிக்கை நிரூபித்துள்ளது என்று மருத்துவத்திற்கான மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர் சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.*

*இலங்கையில் கடுமையான போசாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இல்லை என சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த கடந்த ஓராண்டுக்கு முன்னர் தெரிவித்திருந்த கருத்தும் இந்த அறிக்கையின் மூலம் பொய்யாக்கப்பட்டதாக அந்த கூட்டணியின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ கூறுகிறார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*சுகாதாரப் பணியகம் வெளியிட்டுள்ள சமீபத்திய போஷாக்கு அறிக்கையின்படி, நாட்டில் நிலவும் உண்மையான போசாக்கின்மை நிலைமை மற்றும் அன்று வெளியிடப்பட்ட அறிக்கை மற்றும் இன்று அது குறித்து சுகாதார அமைச்சின் கருத்து என்னவென்பதை மக்களுக்கு எடுத்துரைக்கவேண்டும்.*

*சமீபத்திய போஷாக்கு அறிக்கையின்படி, இலங்கையில் ஏறக்குறைய ஒரு சதவீத குழந்தைகள், அதாவது 15,000க்கும் அதிகமானோர் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.*

*மேலும், ஏறக்குறைய ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் குழந்தைகள் கடுமையான ஊட்டச் சத்து குறைபாட்டின் அபாய வலயத்தில் அல்லது மிதமான நிலையில் உள்ளதால், 05 வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து வருவதுடன், அந்த குழந்தைகளின் இறப்பு விகிதமும் அதிகரித்து வருகிறது-என்றார். (அ)*

# வாள் வைத்திருந்தவர் கைது


*யாழ்ப்பாணம், செப். 26*

*நெல்லியடி குடவத்தை பிரதேசத்தில் வாளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.*

*குடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயது உடைய இளைஞர் ஒருவரே நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.*

*சந்தேக நபரை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**செப்ரெம்பர் - 26 செவ்வாய்க்கிழமை**
சோபகிருது வருடம் - புரட்டாசி 09
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : துவாதசி




**மேடம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்று வீர்கள். சகஊழியர்கள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன விஷயங்கள் முடியும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும்.மாற்றம் ஏற்படும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உயரதிகாரிகள் உங்களை குறை கூறுவார்கள். பொறுமை தேவைப்படும்.

**கடகம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் ராஜதந்திரத்தால் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். அமோகமான நாள்.

**கன்னி**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். வேலைகளை விரைந்து முடிப்பார்கள்.நன்மை கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உங்கள் கை ஓங்கும். தைரியம் கூடும் நாள்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த மனகசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரது விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

**கும்பம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி லாபம் வரும். சக ஊழியர்களிடம் விட்டு கொடுத்துப் போங்கள். கவனம் தேவைப்படும்.

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். புதிய முயற்சிகள் பலிதமாகும். மதிப்புக் கூடும்.

# பா. ஜ. கவுடன் கூட்டணி இல்லை என்பதில் மாற்று கருத்து கிடையாது

## அ. தி. மு. க. கட்சி அறிவிப்பு

சென்னை, செப். 26
மத்திய முகமைகளின் சோதனைக்கு அ. தி. மு. க. பயப்படாது. பா. ஜ. கவுடன் கூட்டணி இல்லை என்பதில் எந்த மாற்றமும் இல்லை என்றும் அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

மக்களவை தேர்தல் நெருங்கிவரும் நிலையில், நாடு முழுவதும் அனைத்துக் கட்சிகளும் தேர்தலுக்கு தயாராகி வருகின்றன.

இந்நிலையில், பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை, ஜெயலலிதா, அண்ணா போன்ற தலைவர்களை, கூட்டணி தர்மத்தை மீறி விமர்சித்து வருகிறார் என்று கூறி, பா. ஜ. கவுடன் கூட்டணி இல்லை என அ. தி. மு. க. அறிவித்துள்ளது. தொடர்ந்து, அதிமுக மூத்த நிர்வாகிகள் டில்லி சென்று பா. ஜ. க. தேசியத் தலைவர் ஜே. பி. நட்டாவை சந்தித்து பேசி இருப்பது, அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே, அ. தி. மு. க. மாவட்ட செயலாளர்களுடனான கூட்டம் நேற்று நடந்தது. இதன்போது, "பா. ஜ. கவுடன் கூட்டணி இல்லை என்பதில் உறுதியாக இருப்பதாக முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

பா. ஜ. கவுடன் கூட்டணி இல்லை என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. 18ஆம் திகதி எடுத்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை. மடியில் கனம் இருப்பவர்களுக்குதான் வழியில் பயம் இருக்கும். 1972 முதல் அ. தி. மு. க. எத்தனையோ சோதனைகளை கடந்து வந்துள்ளது. ஜெயலலிதா மீதும், அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர்கள் மீதும் பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டாலும் கட்சியில் தொய்வு ஏற்படவில்லை.

எங்கள் கடமையில் இருந்து பின்வாங்கும் பேச்சுக்கே இடமில்லை. மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதே அ. தி. மு. கவின் பணி. மத்திய முகமைகள் சோதனை போன்ற பூச்சாண்டிகளுக்கு அ. தி. மு. க. பயப்படாது - என்றார். (ஐ)

# ஸ்டாலின், உதயநிதியை விமர்சித்த இந்து முன்னணி கட்சியினர் கைது!

திருவண்ணாமலை, செப். 26
திருவண்ணாமலை மாவட்டத்தில் முதல்வர் மு. க. ஸ்டாலின் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை அவதூறாக பேசியமை தொடர்பாக இந்து முன்னணி மாநில செயலாளர் மற்றும் கோட்ட தலைவர் ஆகியோர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

விநாயகர் சதுர்த்தியை ஒட்டி விநாயகர் சிலைகளை கரைக்கும் நிகழ்வு நடைபெற்றது. இதன்போது, ஊர்வலத்தை தொடக்கி வைத்த இந்து முன்னணி வேலூர் கோட்டத் தலைவர் மகேஷ் பேசுகையில், முதல்வர் ஸ்டாலின், விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட தி. மு. க. தலைவர்களை அவதூறாகவும் மற்றும் மத உணர்வை தூண்டும் வகையில் பேசினார் என்று கூறப்படுகிறது.

இதையடுத்து அவமதிப்பு சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டார். இதையடுத்து பொலிஸ் நிலையத்தை சுற்றிவளைத்த இந்து முன்னணியினர் போராட்டம் நடத்தினர்.

இதன் பின்னர், இந்து முன்னணியின் மாநில செயலாளர் மணலி மனோகர் பேசுகையில் தமிழக அரசு மற்றும் முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்டவர்களை கடுமையான விமர்சித்தார். இதையடுத்து அவரும் கைது செய்யப்பட்டார். (ஐ)

# தமிழகத்தில் சாதிவாரியான கணக்கெடுப்பு நடத்தவேண்டும்!

## தமிழக வாழ்வுரிமை கட்சி

சேலம், செப். 26
தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும். வன்னியர்களுக்கு 10.5 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் - இவ்வாறு தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிறுவனத் தலைவர் வேல்முருகன் சேலத்தில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு,

தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும். வன்னியர்களுக்கு 10.5 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். இட ஒதுக்கீடு வழங்காவிட்டால் மக்களவைத் தேர்தலில் பாதிப்பு ஏற்படும். இட ஒதுக்கீடு கோரி போராடி உயிர் நீத்த போராளிகளுக்கு மணி மண்டபம் அமைக்க வேண்டும். வாரிசுகளுக்கு அரசு வேலை வழங்க வேண்டும்.

தமிழக அரசில் உயர் பதவிகளில் வடமாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான் நியமிக்கப்படுகின்றனர். பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் பேசும் போது, பா. ஜ. கவினர் குறுக்கிட்டு தரக்குறைவாகப் பேசுவது வருத்தமளிக்கிறது - என்றார். (ஐ)



விநாயகர் சதுர்த்தியை ஒட்டி நேற்று முன்தினம் சென்னையில் பிள்ளையார் சிலைகளை கடலில் கரைப்பதற்காக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட வேளை...!

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போட்டு எமது எழுச்சியை நிறுத்தமுடியாது!

## அநுரகுமார திசாநாயக்க எச்சரிக்கை

கொழும்பு, செப். 26

**தேர்தலை பிற்போட்டு தேசிய மக்கள் சக்தியின் வளர்ச்சியை இடைநிறுத்த முடியாது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.**

**ஊவா பரணகமவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

தேர்தலை பிற்போட்டு தேசிய மக்கள் சக்தியின் வளர்ச்சியை இடைநிறுத்த முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைத்தார்.

இன்று வரையில் தேர்தல் ஒன்று இல்லை. இலங்கை வரலாற்றில் இவ்வாறு தேர்தல் பிற்போடப்பட்ட சம்பவங்களைக் கண்டு இருக்கின்றீர்களா? ஏன் தேர்தல் நடத்தவில்லை? தேர்தல் பிரசாரத்தில் அவர்களுக்கு படுதோல்வியும் தேசிய மக்கள் சக்திக்கு மிகப்பெரிய வெற்றியும் காணப்படுகின்றது.



ஆகவே ரணில் உள்ளிட்ட தரப்பினர் சட்டங்களை மீறி நீதிமன்ற தீர்ப்புகளை உடைத்தெறிந்து தேர்தல் ஆணையகத்தை அச்சுறுத்தித் தேர்தலை நடத்தவிடாமல் செய்கின்றார்கள்.

இவ்வாறு தேர்தலை பிற்போட்டுக் கொண்டிருந்தாலும் அவர்கள் நெருக்கடிக்கு உள்ளாகும் சந்தர்ப்பம் ஒன்று வரும்.

நம் நாட்டின் அரசியலமைப்பு சட்டவாக்கத்திற்கு அமைவாக ஜனாதிபதித் தேர்தலை பிற்போட முடியாது.

அடுத்த வருடம் கட்டாயமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும்.

புதிய ஆட்சி ஒன்றை உருவாக்குவதற்கான தேசிய மட்ட தேர்தல் ஒன்றை விரைவில் காண்போம்-என்றார். (அ)



# கொழும்பு-கண்டி வீதியில் இரு பஸ்கள் மோதி விபத்து!

## 15 பேர் படுகாயம்!

கொழும்பு, செப். 26

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை வெலிமடையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸூடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் வரக்காபொல மற்றும் வதுப்பிட்டிவல வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கடற்கரையிலிருந்து சிசுவின் சடலம் மீட்பு

கொழும்பு, செப். 26

ஆராச்சிக்கட்டுவ கடற்கரை பகுதியில் பிறந்து ஒருநாளேயான ஆண் சிசு ஒன்றின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் மாலை கடற்கரையில் கிரிக்கெட் விளையாட வந்த இளைஞர்கள் மற்றும் கடற்கரையில் இருந்த ஒரு குழுவினர் இந்த சிசுவின் சடலம் கடற்கரையில் கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கும் கரையோரக் காவல் படையினருக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

இது கொலையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சேர் பொன்.இராமநாதன் பீட நுழைவு தேர்வுக்கான முடிவுத் திகதி நீடிப்பு!

யாழ்ப்பாணம், செப். 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சேர்.பொன்.இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடத்தினால் நடத்தப்படும் சங்கீதத்தில் சிறப்பு நுண்கலைமாணி மற்றும் நடனத்தில் சிறப்பு நுண்கலைமாணி கற்கை நெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான உளச்சார்புப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி இம்மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக அனுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுள் குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கான விசேட தகுதிகளைக் கொண்டிருக்கும் மாணவர்களிடமிருந்து சங்கீதத்தில் சிறப்பு நுண்கலைமாணி மற்றும் நடனத்தில் சிறப்பு நுண்கலைமாணி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கான முடிவுத் திகதி கடந்த 21 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் மாணவர்கள் பலரது வேண்டுகோளுக்கிணங்க தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 30.10.2023 ஆம் திகதி சனிக்கிழமை மதியம் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று பதிவாளர் அறிவித்துள்ளார். (அ)

# ஜனநாயக வழியில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த உரிமையுண்டு

## கூறுகின்றார் நீதி அமைச்சர்

கொழும்பு, செப். 26

இலங்கையில் ஜனநாயக வழியில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த மூவின மக்களுக்கும் உரிமை உண்டு என்றும் அதைத் தடுத்து நிறுத்துவது அடிப்படை உரிமை மீறல் என்றும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்து மீண்டும் ஒரு போரை தமிழ் மக்கள் விரும்பாத நிலையில் அவர்கள் தமது அன்புக்குரியவர்களை அமைதியாக நினைவு கூர்வதற்கு இடமளிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த நல்லாட்சிக் காலத்தில் வடக்கு -கிழக்கு மக்கள் அமைதியான முறையில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்திய நிலையில், திலீபன் நினைவேந்தல் நிகழ்வால் இன மோதல் ஏற்படும் என தவறான கருத்தை சிங்கள மக்கள் மத்தியில் எவரும் பரப்பக்கூடாது என்றும் விஜயதாச கூறினார்.



மூவின அரசியல்வாதிகளும் மக்களின் உறவுப் பாலமாகத் திகழவேண்டுமே தவிர இவ்வாறான நிகழ்வுகள் மூலம் அரசியல்வாதிகள் சுயலாபம் தேட முற்படக்கூடாது என்றும் நீதி அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, இந்த நாட்டில் அதிகாரத்தில் இருந்த அனைத்து அரசாங்கங்களும் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு தேவையான உண்மையான முயற்சியை மேற்கொண்டிருக்கவில்லை என்றும் நீதி அமைச்சர் விஜயதாச குற்றம் சாட்டியுள்ளார். (அ)

# யாழ்ப்பாண தென்மோடி கூத்து ஓராள் ஆற்றுகைப் போட்டி

யாழ்ப்பாணம், செப். 26

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் மரபுவழி ஆற்றுகையாளரை ஊக்கப்படுத்தவும் நலிந்து செல்லும் கூத்துமரபுக்கு புத்துயிர் கொடுக்கவும் 'யாழ்ப்பாண தென்மோடி கூத்து ஓராள் ஆற்றுகைப் போட்டி' அடுத்த மாதத்தில் நடத்தப்படவுள்ளது. மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இப்போட்டியில் முதலாம்,இரண்டாம் பிரிவுகள் பாடசாலை மாணவர்களுக்காகவும், மூன்றாம் பிரிவு திறந்தபோட்டியாகவும் அமையவுள்ளது.

இப் போட்டிக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

முதலாம் பிரிவில் தரம் 6 தொடக்கம் 9 வரையிலான மாணவர்கள் பங்குபற்றலாம். முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு முறையே 10000.00, 7000.00, 5000.00 வழங்கப்படும்.

இரண்டாம் பிரிவில் தரம் 10 தொடக்கம் 13 வரையிலான மாணவர்கள் பங்குபற்றலாம். முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு முறையே 12000.00, 7000.00, 5000.00 வழங்கப்படும்.

மூன்றாம் பிரிவு திறந்த போட்டியாக நடைபெறும். இதில் 20 வயது தொடக்கம் 35 வயது வரையிலான ஏனையவர்கள் பங்குபற்றலாம். முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு முறையே 20000.00,15000.00,10000.00 வழங்கப்படும்.

ஒருவரே தனி ஆற்றுகையாளராக பங்கேற்கும் இப்போட்டியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பங்குபற்ற முடியும்.

போட்டியாளர்கள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பப் படிவத்தை 05.10.2023 வியாழக்கிழமைக்கு முன்பாக, 'யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து ஓராள் ஆற்றுகைப் போட்டி' எனக் குறிப்பிட்டு திருமறைக் கலாமன்றம், இல.238,பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரடியாக ஒப்படைக்கலாம் அல்லது தபால் மூலமாக அனுப்பி வைக்கலாம். இவை தவிர 077 4028031, 077 6692657 என்னும் தொலைபேசி இலக்கங்களுக்கு வட்ஸ் அப் மூலமாகவும் அனுப்பி வைக்கலாம். (அ)

ஈழநாடு



அன்ரன் பாலசிங்கம்

# தியாக தீபம் திலீபனின் உண்ணாவிரதமும் பின்னணியும்





தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறை பொறுப்பாளர் தியாக தீபம் திலீபன் (இராசையா பார்த்தீபன்) 36ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து லெப். கேணல் திலீபன் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தது ஏன்? - அதன் பின்னணி குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய ‘விடுதலை’ நூலில் இடம்பெற்ற பதிவு அப்படியே மீள்பிரசுரமாகின்றது.

### ரஜீவ் - பிரபா சந்திப்பு எழுதப்படாத ஓர் ஒப்பந்தம்

1987ம் ஆண்டு ஜூலை மாதம் 29ம் திகதி இந்திய- இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. பாரதப் பிரதமர் ரஜீவ் காந்தியும் இலங்கை அரச அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் கொழும்பில் நிகழ்ந்த விசேட வைபவமொன்றின்போது இவ்வுடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்திற்கு முதல் நாள், அதாவது 1987ம் ஆண்டு ஜூலை மாதம் 28ம் திகதி புதுடில்லியில் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்திக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் மத்தியில் ஒரு இரகசிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. கைச் சாத்து இடப்படாத அந்த இரகசிய உடன்பாடு பற்றி அனேகருக்குத் தெரியாது. அக் காலகட்டத்தில் ரஜீவின் நிர்வாக ஆட்சி பீடம் மூடி மறைத்த உண்மைகளில் இது வும் ஒன்று. ரஜீவ் பிரபா உடன்பாட்டில் சம்பந்தப்பட்ட வர்களில் நானும் ஒருவன் என்பதால் அந்த வரலாற்று நிகழ்வை இங்கு பதிவு செய்வது முக்கியமெனக் கருதுகிறேன்.

தலைவர் பிரபாகரனும், நானும் யோகியும், திலீப னும் புதுடில்லிக்கு அழைத்து வரப்பட்டு அசோக்கா விடுதியில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டது பற்றியும், இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை எம் மீது திணித்து விட எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றியும் முந்திய கட்டுரை யில் விபரித்தேன். தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் அவர் கள் விடுதலைப் புலிகளுக்கு சார்பான நிலை எடுத்துக் கொண்டதால் இந்திய அரசுக்கு சங்கடமான நிலை எழுந்தது. கொழும்பு சென்று ஒப்பந்தத்தில் கைச்சாத்தி டுவதற்கு முன்பாக எப்படியாவது விடுதலைப் புலிகளை வழிக்கு கொண்டு வர வேண்டும் என ரஜீவ் காந்தி விரும்பினார். அவருக்கு ஒரேயொரு மார்க்கம் தான் தென்பட்டது. புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை நேரடியாகச் சந்தித்து, ஒப்பந்தம் பற்றிய அவரது கருத்துக்களை கேட்டறிந்து, அவருடன் ஒரு இணக்கப் பாட்டிற்கு வருவதுதான் சாலச் சிறந்த வழி என ரஜீவ் காந்தி முடிவு எடுத்தார்.

1987ம் ஆண்டு ஜூலை மாதம் 28ம் திகதி நள்ளிரவு. அசோக்கா விடுதியில் ஆழ்ந்த தூக்கத்திலிருந்த என்னையும் பிரபாகரனையும் அவசர அவசரமாக எழுப்பினார்கள் இந்தியப் புலனாய்வு அதிகாரிகள். பிரதமர் ரஜீவ் காந்தி மிகவும் அவசரமாக எம்மைச் சந்திக்க விரும்புவதாகவும் உடனே புறப்படுமாறும் பணித்தார்கள். ஆயுதம் தரித்த கரும் பூனைகளின் வாகன அணி பின்தொடர பிரதம மந்திரியின் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டோம். வீட்டு வாசலில் எமக்காகக் காத்து நின்றார் பிரதமர். ரஜீவ் காந்தியுடன் உள்ளக புலனாய்வுத் துறையின் அதிபர் திரு.எம். கே.நாராயணனும் நின்று கொண்டிருந்தார்.

புன்முறுவல் பூத்தபடி மனமுவந்து எம்மை வரவேற்ற பிரதமர், பிரபாகரனைப் பார்த்து, “உங்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களை நேரில் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்'' என்றார். அங்கு தமிழக அமைச்சர் பண்டுருட்டி இராமச்சந்திரனும் எமக்காக காத்து நின்றார். கலந்துரையாடல் உடனேயே ஆரம்பித்தது. “இந்த ஒப்பந்தம் குறித்து நீங்கள் அதிருப்தி அடைந்திருப்பதாக அறிந்தேன். ஒப்பந்தத்திலுள்ள குறை பாடுகள் பற்றி விபரமாகக் கூறுவீர்களா?” என்று கேட் டார் ரஜீவ் காந்தி. எமது கருத்துகளை விபரமாக விளக்கும்படி பிரபாகரன் என்னைப் பணித்தார். ஒப்பந்தத்தி லுள்ள குறைபாடுகளை ஒவ்வொன்றாக நான் எடுத்து விளக்கினேன்.

இனப் பிரச்சினையைப் பொறுத்தவரை தமிழரின் நில உரிமை மிகவும் முக்கியமானது. இலங்கையில் வட கிழக்கு மாகாணங்களைக் கொண்ட நிலப்பரப்பில் தமிழர்களும், தமிழ்பேசும் முஸ்லிம் மக்களும் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வருகிறார்கள். இந்த நிலம் அவர்களது சொந்த நிலம். அவர்களது தாயக நிலம். இந்தத் தாயக நிலத்தைப் பிரிக்கும் எந்தத் திட்டத்தையும் தமிழ் மக்கள் கொள்ளப் போவதில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்களைக் கொண்ட நிலப்பரப்பு தமிழ் பேசும் மக்களின் தாயகமாக இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட போதும், இத் தாயக நிலத்தின் பிரதேச ஒருமைப் பாட்டை கருத்து வாக்கெடுப்பிற்கு விடுவது என்ற தீர்மானத்தை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இது தமிழர் தாயகத்தை கூறுபோட வழிவகுக்கும் என்று விளக்கி னேன். அடுத்ததாக, மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரப் பரவலாக்கம் வரையறுக்கப்பட்டது என்றும் அது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யவில்லை என்பதையும் விளக்கினேன். எல்லாவற்றிற்கும் மேலாக, வடகிழக்கு மாகாண சபையை கலைத்து விடும் அதிகாரம் இலங்கையின் அரச அதிபர் ஜெயவர்த்தனாவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இவர் ஒரு சிங்கள இனவெறியர். தமிழ் மக்களுக்கு விரோதமான வர். இவர் தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவாரென நாம் நம்பவில்லை என்று கூறினார் பிரபாகரன். அடுத்ததாக ஆயுதக் கையளிப்பு பற்றிய விடயத்தை எடுத்துக் கொண்டோம். ஒப்பந்தம் கைச்சாத்தாகிய 72 மணி நேரத்திற்குள் ஆயுதங்களை சரணடையுமாறு விதிப்பது அநீதியானது. எத்தனையோ ஆண்டுகளாக இரத்தம் சிந்திப் போராடிப் பெற்ற ஆயுதங்களை நான்கு நாட்களுக்குள், அதுவும் தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு கிட்டுவதற்கு முன்பாக கையளிக்கும்படி வற்புறுத்துவது எவ்வ கையிலும் நியாயமாகாது என்றார் பிரபாகரன். நாம் சொல்வதை எல்லாம் ஆர்வமாகவும் பொறுமையாகவும் கேட்டபடி குறிப்பு எடுத்துக் கொண்டிருந்தார் ரஜீவ் காந்தி.

நாம் எமது நிலைப்பாட்டைக் கூறி முடிந்ததும் ரஜீவ் காந்தி சொன்னார். “உங்களது மக்களின் பிரச்சினைக்கு

ஒரு நீதியான தீர்வு காண வேண்டும் என்பதில் எனது அரசாங்கம் கடும் முயற்சிகளை எடுத்து வருகிறது. இந்த விடயத்தில் உங்களது ஒத்துழைப்பு எமக்கு அவசியம். நீங்கள் சொல்வதுபோல இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட மாகாண சபைத் திட்டம் ஒரு தற்காலிக ஒழுங்குதான். அதிலுள்ள குறைபாடுகளை பின்பு நான் ஜெயவர்த்தனாவுடன் பேசி நிவர்த்தி செய்ய முயற்சிப்பேன். தமிழர் தாயகம் பற்றி நீங்கள் எழுப்பிய ஆட்சேப னையை நான் கவனத்தில் எடுத்துள்ளேன். இது பற்றி நான் ஜெயவர்த்தனாவுடன் பேசுவேன். கருத்து வாக்கெ டுப்பு நடத்தாமல் அதனை ஒத்தி வைக்குமாறு சொல்லு வேன். எதற்கும் நீங்கள் இந்திய அரசை நம்ப வேண்டும். தமிழரின் நலன் மீதுதான் நாம் அக்கறை கொண்டு செயற்படுகிறோம். எனவே உங்களது ஆதரவு எமக்குத் தேவை. தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுத்து, அவர்களது பாதுகாப்பை இந்த ஒப்பந்தம் உறுதிப்படுத் தும். ஒப்பந்தத்தை நீங்கள் ஆதரித்தால் எமது பலப்படுத்துவதாக அமையும்” என்றார்.

இந்தியப் பிரதமர் கூறியவற்றை தமிழில் மொழி பெயர்த்து பிரபாகரனுக்கு விளக்கமளித்தார் அமைச்சர் பண்டுருட்டி. “இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களின் நலனைப் பேணவில்லை. மாறாக, தமிழ் மக்களின் நலனைப் பாதிக்கிறது. ஆகவே, இந்த உடன்படிக்கையை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.” என்று அழுத்தம் திருத்தமா கச் சொன்னார் பிரபாகரன். ரஜீவ் காந்திக்கு நிலைமை புரிந்தது. பிரபாகரன் தனது நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கிறார் என்பதையும் அவர் உணர்ந்து கொண்டார். விடுதலைப் புலிகளுடன் முரண்பட்டு காரியத்தைக் கெடுக்க அவர் விரும்பவில்லை. ஆகவே, தனது அணுகு முறையைத் திடீரென மாற்றிக் கொண்டார்.

(மறுபக்கம் பார்க்க)




“உங்களது நிலைப்பாடு எனக்குப் புரிகிறது. நீங்கள் எடுத்த முடிவையோ, கொள்கையையோ மாற்றச் சொல்லி நான் கேட்கவில்லை. நீங்கள் இந்த ஒப் பந்தத்தை ஏற்றுக்

கொள்ளத் தேவையில்லை. ஆனால் அதற்கு எதிர்ப் புத் தெரிவிக்காமல் இருந் தால் போதும்” என்றார் ரஜீவ் காந்தி. “பார்த்தீர்களா?, பிரதம மந்திரியே உங்க ளது வழிக்கு வந்துவிட்டார். ஒப்பந் தத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண் டாம். அது உங்களது நிலைப்பாடு. அதை ஏற்கத் தேவையில்லை. ஆனால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டாம் என்று மட்டும் பிரதமர் கேட்கிறார். இந்த சிறிய ஒத்துழைப்பையாவது நீங் கள் இந்திய அரசுக்காக செய்யலாம் அல் லவா?” என்று ரஜீவிற்காக வக்காலத்து வாங்கினார் பண்டுருட்டியார். இந்தச் சந்திப்பில் அவர் எதற்காக அழைக்கப் பட்டார் என்பது இப்பொழுது புலனாகி யது. ரஜீவ் கொடுத்த விளக்கமும் அதற் குப் பண்டுருட்டியார் அளித்த வியாக்கி யானமும் பிரபாகரனுக்கும் எனக்கும் திருப்தியை அளிக்கவில்லை. “ஒரு விட யத்தை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அதனை நாம் எதிர்க்கிறோம் என்றுதானே அர்த்தம்,’ என்று எனது காதோடு குசு குசுத்தார் பிரபாகரன். ஏற் றுக் கொள்ளாததற்கும் எதிர்ப்புத் தெரி விப்பதற்கும் இடையில் வேறுபாடு காட்டி எம்மைத் திருப்திப்படுத்த முடி யாது என்பதை ரஜீவ் உணர்ந்து கொண் டார். அதனால் பிரச்சினையை வேறு திசைக்கு எடுத்துச் சென்றார்.

“உங்களது இயக்கத்திற்கும், பொது வாக தமிழ் மக்க ளுக்கும் ஜெயவர்த்தனா வில் நம்பிக்கையில்லை என்பது எமக்குத் தெரியும். எனக்கும் அவர் மீது நம்பிக்கை யில்லைதான். என்றாலும் அவர் மீது கடும் அழுத்தம் பிர யோகித்து இந்த ஒப் பந்தத்தைச் செய்திருக்கிறோம். மாகாண சபைத் திட்டத்தில் குறைபாடுகள் இருந் தாலும், பின்பு பேச்சுக்களை நடத்தி தமிழரின் சுயாட்சி அதிகாரத்தைக் கூட் டலாம் அல்லவா? அத்தோடு இந்த மாகாண சபைத் திட்டத்தை உடனடி யாக நடைமுறைப் படுத்துவது சாத்தி யமல்ல. அதற்கு காலம் தேவை. அதற்கு முன்னராக, வடகிழக்கில் ஒரு இடைக் கால அரசை நிறுவலாம். அதில் உங்க ளது அமைப்பிற்கு பிரதான பங்கு வழங் கலாம். இந்த இடைக்கால அரசு சம்பந் தமாக

நான் உங்களுடன் ஒரு இரகசிய உடன் பாடு செய்து கொள்ளவும் ஆயத்தமாக இருக்கிறேன்.” என்றார் ரஜீவ் காந்தி.

“இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட வேண்டாம். தமிழர் தாயகத்தில் புலிக ளின் நிர்வாக ஆட்சியை நிறுவுவதற்கு இது அருமையான சந்தர்ப்பம். இந்தியப் பிரதமருடன் ஒரு இரகசிய உடன்பாடு. இந்த யோசனையை நிராகரிக்க வேண் டாம். இந்திய - இலங்கை ஒப்பந்தம் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ள வேண்டாம். அதற்கு முன்னராக ரஜீவ்-பிரபா ஒப்பந்தம் வரப் போகிறது. இத னைப் பகிரங்கப்படுத்தத் தேவையில்லை. இரகசியமாகவே வைத்துக் கொள்ளலாம்.” என்றார் அமைச்சர் பண்டுருட்டி. இதெல் லாம் முன்கூட்டியே ஒத்திகை செய்யப் பட்ட நாடகம் போல எமக்குத் தோன் றியது. பிரபாகரனுக்கு எதிலுமே நம் பிக்கை இல்லை. எதிலுமே ஆர்வம் காட் டவில்லை. ஆனால் பண்டுருட் டியார் மிகவும் ஆர்வத்துடன் ரஜீவ்-பிரபா ஒப் பந்தத் திற்கு கொண்டிருந்தார்.

ஒரு வடிவம் கொடுக்க முயன்று வடகிழக்கில் ஒரு இடைக்கால நிர்வாக ஆட்சி நிறுவப்பட்டு, அதில் விடு தலைப் புலிகளுக்கு பெரும்பான்மை பிரதிநிதித் துவம் வழங்கப்படுமென முடிவெடுக் கப்பட்டது. ஈழத்திலுள்ள எல்லாப் போராளி அமைப்புகளுக்கும் இடைக் கால ஆட்சியில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென ரஜீவ் கேட்டுக் கொண்டார். பிரபா அதற்கு இணங்க வில்லை. இறுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஈரோஸ் அமைப்புக்கும் மட்டும் குறைந்த அளவில் பிர திநிதித்து வம் வழங்குவதென இணக்கம் காணப் பட்டது. இடைக்கால நிர்வாக ஆட்சி யின் கட்டமைப்பு, அதிகாரம், செயற் பாடு பற்றி விபரமாக பேசப்படவில்லை. அரச அதிபர் ஜெயவர்த்தனாவுடன் பேசி இறுதி முடிவு எடுப்பதென ரஜீவ் வாக்கு றுதி அளித்தார். தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டுமென்றும், சிங்கள அரசாங்கம் புதிதாக காவல் நிலையங்களைத் திறக்கக் கூடாதென்றும் பிரபாகரன் கேட்டுக் கொண் டார். அதற்கும் ரஜீவ் காந்தி இணக்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் பொதுமக்களிடமி ருந்து கட்டாய வரி வசூலிப்பு செய்வ தாக ஜெயவர்த்தனா அரசு புலிகள் மீது குற்றம் சுமத்துகிறது. வரி வசூலிப்பை நிறுத்த முடி யாதா எனக் கேட்டார் ரஜீவ் காந்தி. அந்த வரிப் பணம் எமது இயக்கத்தின் நிர்வாகச் செலவுக்கே பயன் படுத்தப் படுகின்றது. அந்தத் தொகையை இந்திய அரசு எமக்குத் தருவதானால் வரி அறவிடுவதை நிறுத்தலாம் என்றார் பிர பாகரன். மாதாந்தம் எவ்வளவு தொகைப் பணத்தை வரியாகப் பெறுகின்றீர்கள் என ரஜீவ் கேட்க, இலங்கை நாணயப் படி ஒரு கோடி ரூபா வரை திரட்டுகி றோம் என்றார் பிரபா. “அப்படியென் றால் இந்திய நாணயப் படி ஐம்பது இலட்சம் ரூபா வரை வரும். அந்தப் பணத்தை நான் கொடுக்கிறேன்” என்றார் ரஜீவ்.

இறுதியாக ஆயுதக் கையளிப்பு விவ காரம் எழுந்தது. “ஆயுதங்கள் முழுவதை யும் கையளிக்குமாறு நாம் கேட்கவில்லை. நல்லெண்ண சமிக்ஞையாக சிறு தொகை ஆயுதங்களைக் கையளித்தால் போதும். பொது மக்க ளுக்கும் போராளிகளுக்கும் பாதுகாப்பாக இந்திய அமைதிப் படை வடகிழக்கில் செயற்படும். சிங்கள ஆயு தப் படைகளுடன் போர் நிறுத்தம் தொடர்ந்து இருக்கும். இந்த சூழ்நிலை யில் உங்களுக்கு போராயுதங்கள் தேவைப் படாது அல்லவா?” என்றார் இந்தியப் பிரதமர். பிரபாகரன் பதிலளிக்கவில்லை. ஆழமாக சிந் தித்தபடி இருந்தார். திடீ ரெனக் குறுக்கிட்டார் பண்டு ருட்டியார். “எதற்காக யோசிக்க வேண்டும். இந்தியா கொடுத்த ஆயுதங்களில் பழைய, பாவிக்க முடியாத, துருப்பிடித்த ஆயுதங்கள் சில வற்றை கொடுத்தால் போச்சு” என்றார். “இந்தியா கொடுத்த ஆயுதங்கள் எல் லாமே அப்படித்தான்” என்று கிண்ட லாக பதிலளித் தார் பிரபா. “பரவாயில்லையே, அதில் சிலவற்றைக் கொடுங்கள். தேவை ஏற்படும்பொழுது இந்திய அரசு புதிய ஆயுதங்களை தரும் அல்லவா?” என்றார் அமைச்சர் பண்டு ருட்டியார். தான் கூறியதை ஆங்கிலத் தில் மொழிபெயர்த்து ரஜீவிடம் சொன் னார். அதை ஆமோ திப்பது போல பிரத மரும் தலையசைத்தார்.

அப்பொழுது அதிகாலை இரண்டு மணி இருக்கும். அன்று காலை ஒன்பது மணியளவில் புதுடில்லியிலிருந்து கொழும்பு புறப்பட இருந்தார் ரஜீவ் காந்தி. பிற்பகல் மூன்று மணிக்கு இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாக இருந் தது. புலிகளின் தலைவர் பிரபாவுடன் ஏதோ ஒரு சுமுகமான இணக்கப்பாட் டிற்கு வந்ததுபோல மகிழ்ச்சியுடன் காணப்பட்டார் ரஜீவ். பிரபாகரனுக்கு மனதில் மகிழ்ச்சி இல்லை. அவரது முகத் தில் அது தெளி வாகத் தெரிந்தது. ஏதோ பெரிய சாதனை செய்துவிட்டது போன்று பண்டுருட்டியார் திருப்தியுடன் தென் பட்டார். தூக்கமின்மையால் எல்லோ ருமே சோர்ந்து போய் இருந்தோம். கூட் டம் முடியும் கட்டத்திற்கு வந்துவிட்டது. அப்பொழுது நான் அமைச்சர் பண்டு ருட்டியிடம் கேட்டேன், “ரஜீவ் - பிரபா இரகசிய ஒப்பந்தம் என பல விடயங் களை கதைத்தோம். பிரதம மந்திரியும் பல வாக்குறுதிகளைத் தந்திருக்கிறார். இதை எல்லாம் சுருக்கமாக எழுத்தில் இட்டு, அவரிடமிருந்து கைச்சாத்துப் பெற்றால் என்ன?” என்றேன்.

பண்டுருட்டியார் சிறிது நேரம் யோசித்தார். “இந்த இரகசிய உடன்பாட் டில் சர்ச்சைக்குரிய பல விடயங்கள் இருக்கின்றன அல்லவா? பண விவகாரம் இருக்கிறது. ஆயுதக் கையளிப்புப் பிரச்னை இருக்கிறது. இதெல் லாம் அம்பலத்திற்கு வந்தால் இந்தியாவிலும் இலங்கையிலும் பெரும் அரசியற் சூறாவளியே ஏற்படும். உங்க ளுக்கு பிரதம ரில் நம்பிக்கையில் லையா? இது ஒரு **Gentlemen Agreement**. இரு பெரும் மனிதர்களின் எழுதப்படாத ஒப்பந்தமாக இருக்கட்டுமே?” என்றார் அமைச்சர். ரஜீவ் காந்திக்கும் ஆங்கிலத் தில் மொழி பெயர்த்துச் சொன்னார்.

“நீங்கள் எதற்கும் கவலை கொள்ளத் தேவையில்லை. கொடுத்த வாக்குறுதி களை நான் நிறைவேற்றுவேன். அமைச் சர் சொல்வது போன்று இது ஒரு எழுதப் படாத **Gentlemen Agreement** ஆக இருக்கட்டும்.”

என்றார் ரஜீவ் காந்தி. இறுதிக் கட்டத் தில் நான் அவருடன் முரண்பட விரும்ப வில்லை. முடிவாக எமது தடுப்புக் காவல் பற்றி முறையிட்டோம். பிரபாகரன் மீதான தடுப்புக் காவலை அகற்றி, அவரை தமிழீழம் அனுப்புவதற்கு உடன் ஒழுங்கு செய்வதாக உறுதி அளித்தார் ரஜீவ்.

ரஜீவ் காந்தியின் இல்லத்திலிருந்து அசோக்கா விடுதிக்கு நாம் போய்ச் சேர அதிகாலை மூன்று மணியாகி விட்டது. “அண்ணா, இருந்து பாருங்கோ, இந்த இரகசிய ஒப்பந்தமும் வாக்குறுதிகளும் ஒன்றுமே நிறைவேறப் போவதில்லை. இதெல்லாம் ஒரு ஏமாற்று வித்தை” என்று விரக்தியோடு கூறிவிட்டு தனது அறைக்குள் நுழைந்தார் பிரபாகரன்.

எனது அறைக்குள் சென்றபோது, விழித்தபடி காத்திருந்த திலீபன் விடியும் வரை என்னைத் தூங்கவிட வில்லை. ரஜீவ் பிரபா சந்திப்பு பற்றியும், இருவருக் கும் மத்தியில் செய்து கொள்ளப்பட்ட இரகசிய ஒப்பந்தம் பற்றியும் விபரமாக திலீபனுக்குச் சொன்னேன். மிகவும் ஆர்வ மாக கேட்டுக் கொண்டிருந்தான். “அண் ணன் என்ன சொல்கிறார்” என்று கேட் டான். “பிரபாவுக்கு திருப்தி இல்லை. நம்பிக்கையுமில்லை. இந்த வாக்குறுதி கள் ஒன்றுமே நிறைவேறப் போவதில்லை என்று உறுதியாகச் சொல்கிறார்” என் றேன்.

ஆழமாக சிந்தித்தபடியிருந்த திலீபன், “அண்ணை சொல்வதுதான் நடக்கும்” என்றான். உண்மையில் அப்படியேதான் நடந்தது. ரஜீவ் - பிரபா இரகசிய ஒப்பந் தம் நிறைவேற்றப்படவில்லை. இடைக் கால நிர்வாக அரசும் உருவாக்கப்பட வில்லை.

தலைவர் பிரபாகரனுக்கு கொடுத்த வாக்குறுதிகளை இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி நிறைவேற்றவில்லை என்பதை உணர்ந்த திலீபன் ஆத்திரமடைந்தான். இந்திய அரசு செய்த வரலாற்றுத் தவறை உலகிற்கு அம்பலப்படுத்தும் நோக்கத் தோடு சாகும் வரை உண்ணா விரதப் போராட்டத்தைத் தொடங்கினான். இறு தியில் தனது உயிரை அர்ப்பணித்து உல கிற்கு உண்மையை உணர்த்தினான். எழு தப்படாத ரஜீவ் - பிரபா ஒப்பந்தம் பூகம் பமாக வெடித்து, தமிழீழத்தில் ஒரு பேரெ ழுச் சியை உண்டு பண்ணியது.

# மட்டக்களப்பில் டெங்கு தீவிரம்!

**168 வீடுகளில் பரிசோதனை!**
**47 கிணறுகளில் டெங்கு குடம்பிகளை உண்ணும் மீன் குஞ்சுகள் விடப்பட்டன!!**

மட்டக்களப்பு, செப். 26

**மட்டக்களப்பு மாவட்டத்தில் பருவமழை பெய்ய ஆரம்பித்திருப்பதால் டெங்கு நோய் தீவிரமாக பரவும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இதனை கருத்திற்கொண்டு சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**



மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜி.சுகுணனின் பணிப்புரையின் பேரில் மட்டக்களப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் லதாகரனின் வழிகாட்டலில் நேற்று முன் தினம் காலை கோட்டைமுனை பிரதேசத்தில் பாரிய டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது ஆறு பிரிவுகளாக சுகாதார பகுதியினர் பிரிக்கப்பட்டு 168 வீடுகளில் டெங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை 47 கிணறுகளில் டெங்கு குடம்பிகளை உண்ணுகின்ற மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

கோட்டைமுனை சுகாதார பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தலைமையில் சுகாதார பரிசோதகர்கள், மாநகர சபை ஊழியர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இப்பரிசோதனை நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்திருந்தனர்.

டெங்கு பரவும் இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன், தேவையற்ற பொருட்கள் மட்டக்களப்பு மாநகர சபை சுத்திகரிப்பு தொழிலாளர்களினால் அகற்றப்பட்டன.

இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் மட்டக்களப்பு மாநகர சபையின் சுகாதார பிரிவினரும் பங்குகொண்டனர் என்பதை குறிப்பிடத்தக்கது.

(அ)

# தேங்கி நிற்கும் கழிவு நீர்!

**சுகாதார சீர்கேட்டால் மக்கள் அவதி**





அம்பாறை, செப். 26

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகரசபைக்குட்பட்ட பெரியநீலாவணை இஸ்லாமிக் ரிலீப் வீட்டுத்திட்டத்தில் தேங்கி நிற்கும் கழிவு நீரினால் பாரிய சுகாதார சீர்கேடு இடம்பெறுவதாக அங்குவாழும் குடியிருப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட 96 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இஸ்லாமிக் ரிலீப் வீட்டுத் திட்டத்தில் 18 வருங்களாக முறையான வடிகான் இன்மையால் சமையலறைக் கழிவுநீர், குழியலறைக் கழிவுநீர் மற்றும் மலசலகூடக் கழிவுகள் போன்றவை வீட்டுத்திட்டத்தின் பின்புறங்களில் தேங்கிநின்று பாரிய அளவிலான நுளம்புகளைப் பெருக்கி டெங்கு, மலேரியா போன்ற நோய்களை ஏற்படுத்துகின்றன.

மக்கள் செறிந்து வாழும் இந்த வீட்டுத்திட்டத்திலும் அதனை அண்டிய குடியிருப்புகள், பாடசாலை, வைத்திய சாலை, பொலிஸ் நிலையம் போன்ற அரச நிறுவனங்களிலும் பாடசாலை மாணவர்கள், முதியவர்கள், நோயாளர்கள், அரச அதிகாரிகள் என பலரும் வாழ்வதால் தேங்கிநிற்கும் கழிவுநீரால் மாத்திரமன்றி பருவ மழை ஏற்படுகின்ற காலத்தில் தேங்கி நிற்கும் மழைநீராலும் இலகுவில் நோய்த் தொற்று ஏற்பட்டு இறக்கும் அவல நிலையும் காணப்படுகின்றது.

காலத்துக்கு காலம் அரசியல்வாதிகள் பலரும் அதிகாரிகளுடன் வந்து தனக்கு வாக்களித்து வெற்றி பெற வைத்தால் இந்தப் பிரச்னையை நிரந்தரமாக தீர்த்து தருவதாக வாக்குறுதியளித்து செல்கிறார்கள். ஆனால் நாங்கள் இவ்வாறான நெருக்கடியான வாழ்விலிருந்து மீண்டபாடில்லை எனவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (அ)

# கட்டாக்காலி நாய்கள் தொல்லை அதிகரிப்பு

அம்பாறை, செப். 26

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட வீதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அத்துடன் பிரதான வீதிகளில் பொதுமக்கள் நடமாட முடியாத அளவுக்கு கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறித்த வீதியில் அன்றாடம் செல்பவர்களை இந்த நாய்கள் கடிக்க வருகின்றன. இதன் காரணமாக வீதியில் பயணம் செய்வோர் விழுந்து காயங்களுக்குள்ளாகின்றனர்.

மேலும் வீதிகளில் காணப்படும் விலங்கு எச்ச கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படாமையினால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் இப்பகுதிகளில் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன.

தற்போது 20 இற்கும் மேற்பட்ட நாய்கள் இரவு பகலாக கட்டாக்காலிகளாக உலாவி நகருக்குள் கழிவுகளை உண்பதற்காக வெளியிடங்களில் இருந்து உட்பிரவேசிக்கின்றன.

மேலும் இப்பிரதேசத்தில் பிரதான வீதிகளில் இரவு பகல் பாராது மேற்படி கட்டாக்காலி நாய்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் தொடர்ச்சியாக விபத்துக்கள் இடம் பெற்று வருகின்றன.

குறிப்பாக கல்முனை- நற்பிட்டிமுனை பிரதான வீதி கல்முனை -பாண்டிருப்பு பிரதான வீதி கல்முனை -சாய்ந்தமருது செல்லும் முக்கிய பிரதான வீதிகளில் பகல் இரவு பாராது சொறி நாய்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. கூட்டம் கூட்டமாக இந்த நாய்கள் வீதிகளில் நடமாடுவதினாலும் வீதிகளில் கூட்டமாக கிடப்பதினாலும் தொடர்ச்சியாக விபத்துக்கள் இடம் பெற்று வருகின்றன.

எனவே இவ்விடயங்களில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி கட்டாக்காலி நாய்களின் நடமாட்டங்களை கட்டுப்படுத்தி பொது மக்களை விபத்துக்களில் இருந்து பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)

# முஸ்லிம் எய்ட் சிறலங்கா நிறுவனத்தின் கல்வி அபிவிருத்தி அங்குரார்பண நிகழ்வு





அம்பாறை, செப்.

முஸ்லிம் எய்ட் சிறிலங்கா நிறுவனத்தின் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட பங்குபற்றுதலுடன் கூடிய கல்வி அபிவிருத்தி - கட்டம் -3 அங்குரார்பண நிகழ்வு கிண்ணியா வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் நீண்டகாலமாக கல்வி அடைவில் பின்தங்கிய நிலையில் இருந்து வருகின்ற கிண்ணியா கல்வி வலயத்திலுள்ள கல்வி மற்றும் கல்வி அடைவுகளைப் பாதிக்கின்ற பல்வேறு தேவைகள் உடைய 13 பாடசாலைகளில் மேற்படி தொணிப்பொருளில் மூன்றாம் கட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது. முதலாவது கட்டத்தில் 5 பாடசாலைகளும் இரண்டாவது கட்டத்தில் 13 பாடசாலைகளும் இத் தொடர் நிகழ்ச்சித்திட்டத்தில் பயன்பெற்றன.

இலங்கை அரசாங்கத்தின் கல்விக் கொள்கைளை அடியொட்டி நிலைபேறான அபிவிருத்தி இலக்கு - 4 இனை பிரதிபலிக்குமுகமாக முஸ்லிம் எய்ட் சிறிலங்கா 13 பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டினை உறுதி செய்யும் வகையில், கட்டுமாணம் சார்ந்த மற்றும் கற்றல், கற்பித்தல் , ஊக்கப்படுத்தல் சார்ந்த செயற்பாடுகள் அடையாளம் காணப்பட்டு, வள ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

நவீன கல்விச் சூழலில் மாணவர்கள் உட்பட கல்விச் சமூகம் எதிர்கொள்கின்ற பல்வேறு சவால்களை எதிர்கொள்ளக்கூடியதாக இக்கருத்திட்டம் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம், கிண்ணியா வலயக் கல்விப்பணிப்பாளர் நசூகர் கான், முஸ்லிம் எய்ட் சிறிலங்கா நிறுவனத்தின் வதிவிடப்பணிப்பாளர் ஏ.சி பைஸர்கான், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களும், நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் முனீர் முஸ்தபா, திருமலை மாவட்டத்தில் கல்வி அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உயரதிகாரிகள், ஊர்ப்பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இந்தியாவுடனான உறவு எங்களுக்கு முக்கியமானது!

## கனடா பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

ஒட்டாவா, செப். 26

இந்தியா - கனடா உறவில் விரிசல் ஏற்பட்ட நிலையில், 'இந்தியாவுடனான உறவு எங்களுக்கு முக்கியமானது' என அந்த நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் பில் பிளேயர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தடை செய்யப்பட்ட காலிஸ்தான் ரைகர் போர்ஸ்' என்ற அமைப்பின் தலைவரும், இந்தியாவில் தேடப்படும் நபராக அறிவிக்கப்பட்டவருமான ஹர்தீப் சிங் நிஜ்ஜார்(45) கடந்த ஜூன் மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்த விவகாரத்தில் இந்தியா மீது கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பழி சுமத்தினார். இதனால் இந்தியா - கனடா இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது.

இதற்கிடையே குளோபல் நியூஸ் செய்தி நிறுவனத்திற்கு கனடா பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேயர் சில முக்கிய கருத்துகளைத் தெரிவித்துள்ளார். அதில், இந்தியாவுடனான எங்கள் உறவு இப்போது ஒரு சவாலாக இருக்கிறது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். இந்தியா உடனான உறவு எங்களுக்கு முக்கியமானது. ஆனால், அதே நேரத்தில், சட்டத்தைப் பாதுகாத்து எங்கள் குடிமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு எங்களிடம் இருக்கிறது.

நாங்கள் ஒரு முழுமையான விசாரணையை நடத்தி உண்மையைப் பெறுவதற்கும் எங்களுக்குப் பொறுப்பு உள்ளது. இப்போது விசாரணை தொடர்ந்து நடந்து வருகிறது. இதில் உண்மையை



நாங்கள் நிச்சயம் கண்டறிவோம். குற்றச்சாட்டுகள் உண்மை என நிரூபிக்கப்பட்டால் அது பெரிய பிரச்னைதான். ஏனென்றால் கனடா மண்ணில் கனடா குடிமகன் ஒருவரை கொல்வது என்பது எங்கள் இறையாண்மையை மீறும் செயலாகும் - என்றார். (ஐ)

## உலகின் மிகப்பெரிய இந்து கோயில் அமெரிக்காவில் விரைவில் திறப்பு!



அமெரிக்காவின் நியூ ஜெர்சியின் ராபின்வில்லி டவுன்ஷிப்பில் பாப்ஸ் சுவாமி நாராயண் அக்ஷர்தாம் கோயில் கட்டப்பட்டுள்ளது. 2011 முதல் 2023 வரையிலான 12 ஆண்டுகளில் அமெரிக்கா முழுவதிலுமிருந்து 12,500 தன்னார்வலர்கள் இந்த கோயிலை கட்டியுள்ளனர்.

183 ஏக்கரில் அமைந்துள்ள இந்த கோயில் உலகின் மிகப்பெரிய 2ஆவது இந்து கோயில் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

கம்போடியாவில் உள்ள அங்கோர் வாட்டிற்கு அடுத்த படியாக நியூ ஜெர்சியில் உள்ள இந்த கோயில் இரண்டாது பெரிய கோயிலாக கருதப்படும்.

12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அங்கோர்வாட் கோயில் வளாகம், உலகின் மிகப்பெரிய இந்துக் கோயிலாகும். இது, 500 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது. யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளமாக இதனை அங்கீகரித்துள்ளது.

## தண்ணீருக்கு அடியில் பிரமாண்டமான மசூதி!



டுபாய், செப் 26

உலகிற்கு எண்ணெய் வளத்தை வழங்கும் நாடுகளின் பட்டியலில் டுபாய் முன்னணியில் உள்ளது என்பது பலரும் அறிந்ததே! அதுபோல, உலகையே திரும்பிப் பார்க்க வைக்கும் பிரமிக்க வைக்கும் கட்டடக் கலைக்கு பஞ்சமில்லை.

இன்னோர் அதிசயத்தை நிகழ்த்தி காட்டிருக்கிறது துபாய் அரசாங்கம். மூன்று அடுக்கு மிதக்கும் மசூதியைக் கட்டி உலகின் கவனத்தை டுபாய் தன் பக்கம் ஈர்த்துள்ளது. உலக வரலாற்றில் தண்ணீருக்கு அடியில் மசூதி கட்டப்படுவது இதுவே முதல் முறை.

சுமார் 55 மில்லியன் திர்ஹாம்கள் மதிப்பீட்டில் துபாய் அரசால் கட்டப்படும் இந்த மசூதி உலக அதிசயங்கள் பட்டியலில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அற்புதமான மசூதி இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. ஒரு பகுதி தண்ணீரின் மேற்பரப்பில் அழகாக மிதக்கிறது, மற்ற பாதி நீரின் கீழ் மூழ்கியிருக்கிறது.

இந்த நீரில் மூழ்கிய பகுதி தான் அமைதியான பிரார்த்தனைக்கான இடமாகும். கை கழுவும் வசதிகள், கழிப்பறைகள் என கடலுக்கு அடியில் பிரார்த்தனைக்காக வருபவர்களுக்கு வசதிகள் செய்யப்படுகின்றன.

துபாய்க்கு அதிக பார்வையாளர்களை ஈர்ப்பதற்காக ஒரு புதிய சுற்றுலா முயற்சியின் முக்கிய பகுதியாக இந்த மசூதி உள்ளது.

அனைத்து மதத்தினரும் மசூதிக்குச் செல்ல வரவேற்கபடுகிறார்கள், ஆனால் பார்வையாளர்கள் இஸ்லாமிய பழக்கவழக்கங்களுக்கு ஏற்ப உடை அணியுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த மசூதி கட்டுமானம் ஒக்ரோபர் 2023 இல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மசூதி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## குறுங்கோள் மாதிரியுடன் பூமி திரும்பியது விண்கலம்

நியூயோர்க், செப். 26

ஆஸ்டிராய்ட் எனப்படும் சூரியனை சுற்றி வரும் குறுங்கோள்களை ஆராய்ச்சி செய்வதில் அமெரிக்காவின் மத்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸா பல வருடங்களாக ஈடுபட்டு வருகிறது.

2016 செப்ரெம்பர் மாதம் அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலிருந்து ஓசிரிஸ்-ஆர். ஈ. எக்ஸ் எனும் விண்கலனை பூமியிலிருந்து 200 மில்லியன் மைல்களுக்கு அப்பால் உள்ள பென்னு எனும் குறுங்கோளை ஆராய்ச்சி செய்ய அமெரிக்காவின் மத்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான நாஸா அனுப்பியிருந்தது. அந்த குறுங்கோளிலிருந்து ஆராய்ச்சிகளுக்காக மாதிரி படிவங்களை பூமிக்கு கொண்டு வரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பென்னுவின் மேற்பரப்பில் ஆராய்ச்சி செய்ய அந்த விண்கலனிலிருந்து அனுப்பப்பட்ட ஆய்வு சாதனம் 2020 இல் பென்னுவை அடைந்தது. பாறைகள் நிறைந்த அந்த குறுங்கோளின் மேற்பரப்பிலிருந்து 250 கிராம் மண்துகள்களை அந்த சாதனம் எடுத்தது.

இந்நிலையில் ஓசிரிஸ் விண்கலனிலிருந்து கேப்ஸ்யூல் எனப்படும் மிக சிறிய மற்றொரு விண்கலன் மூலம் பென்னுவின் மண்துகள் மாதிரிகள் ஓசிரிஸ்-ஆர்ஈஎக்ஸ் விண்கலனால் பூமியிலிருந்து 1,07,826 உயரத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்டது.

அந்த கேப்ஸ்யூல் 6.21 பில்லியன் கிலோமீற்றர் பயணத்தை நேற்று நிறைவு செய்தது. பூமியின் வளிமண்டலத்தில் நுழைந்து அமெரிக்காவின் உடா மாநிலத்தில் பாலைவனத்தில் வந்திறங்கியது. இதனை நாஸா அதிகாரிகள் பத்திரமாக மீட்டெடுத்தனர். விண்கலனிலிருந்து வெகு வேகமாக பூமியை நோக்கி வந்த கேப்ஸ்யூல், வளிமண்டலத்தை தாண்டி, அதில் இணைக்கப்பட்ட பராசூட் மூலம் மெதுவாக பூமியை தொட்டது.

"விஞ்ஞானிகளின் சூரிய மண்டல ஆராய்ச்சிக்கு ஒரு புதிய பார்வை கிடைக்க இந்த ஆராய்ச்சி வழி செய்யும்" என நாஸாவின் இந்த முயற்சி குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அதன் தலைவர் பில் நெல்சன் தெரிவித்தார்.



## பூமியில் சம இரவு - பகல் புகைப்படம் வெளியானது!



பாரிஸ், செப், 26

ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் (ஈ. எஸ். ஏ) தனது எக்ஸ் (ருவிற்றர்) பக்கத்தில் நேற்று முன்தினம் ஒரு செயற்கைக்கோள் புகைப்படத்தை வெளியிட்டது. அதில், சூரியனின் ஒளி பூமியின் மேற்பரப்பில் சரி பாதியாக படுவது தெளிவாக பதிவாகி உள்ளது. 'ஈக்வினாக்ஸ்' என்பது சூரியன் நேரடியாக பூமத்திய ரேகைக்கு மேல் தோன்றுவதால், பகல், இரவு சம அளவு ஏற்படும்.

இந்தப் புகைப்படத்தை பகிர்ந்து ஈ. எஸ். ஏ. கூறும் போது, "குளிர்காலம் வருகிறது. பகல் இரவு பாதியாக இன்று பிரிந்தது. இந்த செயற்கைக்கோள் படம்காலை 09.00 மணிக்கு எடுக்கப்பட்டது" என்று தெரிவித்துள்ளது. இதுகுறித்து ஸ்பேஸ்.காம் இணையதளத்தில், "பூமியின் வடக்கு அரைகோள பகுதியில் இலையுதிர் காலம் தொடங்கியது. தெற்கு அரை கோளத்தில் வசந்த காலம் தொடங்கியது. தற்போது சூரியன் தென் திசையில் பயணிக்கிறது" என்றுதெரிவித்துள்ளது. இந்தப் புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி உள்ளது. பலர் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

## நைஜீரியாவில் தீ விபத்து; 34 பேர் உயிரிழந்தனர்!



நைஜீரியா பெனின் எல்லை பிராந்திய எண்ணெய் சேகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக இரு குழந்தைகள் உட்பட 34 பேர் உயிரிழந்தனர்.

எரிபொருள் சேகரிப்பு நிலையத்தை சூழவுள்ள பிரதேசங்களில் பல தீப்பிழம்புகள் வெடித்துள்ளன.

அதனை தொடர்ந்து கரும்புகை அதிக அளவில் வெளிப்படுத்தப்பட்டு உள்ளன பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவத்தில் பலர் காயமடைந்த நிலையில், தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# எனக்கு அதிகாரம் கிடைத்தால் மைத்திரிக்கு பாடம் புகட்டுவேன்

## கூறுகிறார் சரத் பொன்சேகா

கொழும்பு, செப். 26

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இராணுவம் தொடர்பில் அடிப்படை அறிவு கூட இல்லை. அதன் காரணமாகவே அவர் எனக்கு வழங்கப்பட்டுள்ள பீல்ட் மார்ஷல் நிலையை விமர்சிக்கின்றார். எனக்கு என்றாவது ஒரு நாள் அதிகாரம் கிடைத்தால் மைத்திரிபால சிறிசேனவுக்கு பாடம் புகட்டுவேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேக்கா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் முன்னெடுக்கப்பட்ட 100 நாள் வேலைத்திட்டத்தில் எனக்கும், சிரானி பண்டாரநாயக்கவுக்கும் எவ்வாறு நியாயம் வழங்குவது என்பது தொடர்பில் ஆராய வேண்டும் என்ற முன்மொழிவு காணப்பட்டது.

இவற்றுக்கு இணக்கம் தெரிவித்த பின்னரே பொது வேட்பாளராக அவர் வேட்புமனு தாக்கல் செய்தார். அவருக்காக 100 தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நான் நடத்தியிருக்கின்றேன்.

தேர்தல் கூட்டங்களில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட் ஐக்கிய தேசிய கட்சியின் அனைவரும் பாரிய அர்ப்பணிப்புக்களை செய்தனர்.

ஆனால் பதவியேற்று 48



மணித்தியாலங்களுக்குள் அவர்கள் அனைவருக்கும் எதிராகவும் செயற்படத் தொடங்கியவரே மைத்திரிபால சிறிசேன. இராணுவத்தைப் பற்றி அடிப்படை அறிவு கூட அவருக்கு இல்லை. இங்கிலாந்தில் இராணுவத் தளபதியாக பதவி வகிப்பவர்கள் பீல்ட் மார்ஷல் ஆவர். ஆனால் அந்நாட்டு இராணுவத்தில் 80000 சிப்பாய்கள் மாத்திரமே இருப்பர். பீல்ட் மார்ஷல் பதவிக்கும் சிப்பாய்களின் எண்ணிக்கைக்கும் தொடர்பில்லை.

மஹிந்த எனது கேணல் நிலையை நீக்கியபோது, எனக்கு பீல்ட் மார்ஷல் நிலையை வழங்குவதாக ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்றத்தில் வாக்குறுதியளித்தது.

அந்த வாக்குறுதியையே மைத்திரிபால சிறிசேன நிறைவேற்றினார். மாறாக அவரது கால்களில் விழுந்து நான் பீல்ட் மார்ஷல் நிலையைப் பெறவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கான சூழலை மைத்திரிபால சிறிசேன போன்றவர்கள் எவ்வாறு உருவாக்கினர் என்பதை நான் பாராளுமன்றத்தில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றேன். என்றாவது ஒரு நாள் எனக்கு அதிகாரம் கிடைத்தால் மைத்திரிபால சிறிசேனவுக்கு நான் பாடம் புகட்டுவேன். சட்டம் என்றால் என்ன? நீதி என்றால் என்ன என்பதை அவருக்கு கற்றுக்கொடுப்பேன்-என்றார்.



# சுவாமி விவேகானந்தரின் சிலை கொட்டகலையில் திறந்துவைப்பு!

கொழும்பு, செப். 26

மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் கொட்டகலையில் சுவாமி விவேகானந்தர் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார்.

நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட கொட்டகலை டெலிகிளேயர் பாடசாலையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

பாடசாலை அதிபர் எஸ். அலெக்சாண்டர் தலைமையில் திறப்பு விழா நேற்று முன்தினம் சிறப்பாக இடம் பெற்றது.

அச்சமயம் ஆலயவழிபாட்டின்பின்னர் மட்டக்களப்பில் இருந்து சென்ற ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் அதனை ஆசார பூர்வமா திறந்துவைத்தார்.

தொடர்ந்து மலையக மக்களுக்கு அருளுரை ஆற்றினார்.

அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் அனைவரும் சுவாமிகளிடம் ஆசி பெற்றனர். (அ)

# அமெரிக்க நிறுவனமும் எரிபொருள் விநியோகம்!

கொழும்பு, செப். 26

அமெரிக்காவை தளமாகக் கொண்ட ஆர். எம். பார்க்ஸ் நிறுவனம் அடுத்த மாதம் இலங்கையில் எரிபொருள் விநியோகத்தை விரைவில் ஆரம்பிக்கும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எரிபொருட்களை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் அந்த நிறுவனம் கடந்த ஜூன் மாதம், 20 வருட ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

இந்த நிறுவனத்திற்கு முதலில் இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 150 எரிபொருள் நிலையங்கள் வழங்கப்படும். பின்னர் 50 எரிபொருள் நிலையங்களை சொந்தமாக திறக்க வாய்ப்பு கிடைக்கும்.

இதேவேளை, கடந்த ஒகஸ்ட் மாத இறுதியில் எரிபொருள் விநியோகத்தைத் ஆரம்பித்த சீனாவின் சினோபெக் நிறுவனம் இரண்டு பிரதேசங்களில் தற்போது விநியோகத்தை முன்னெடுத்துள்ளது.

சினோபெக் தற்போது அனைத்து வகையான எரிபொருளையும் தமது போட்டியாளர்களைவிட 3 ரூபாய் குறைவாக வழங்குகிறது.

இந்தநிலையில், ஆர். எம். பார்க்ஸ் நிறுவனத்துக்கும் அதன் எரிபொருளை உள்ளூர் சந்தையில் உள்ள விலையை விடவும் குறைந்த விலையில் வழங்க வாய்ப்பு வழங்கப்படும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ)

# 225 பாராளுமன்ற உறுப்பினர்களால் அதலபாதாளத்துக்குள் விழுந்த நாடு!

## மிஹிந்தலை விகாராதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 26

அதிகாரத்தை கைப்பற்றவே அனைத்து தரப்பினரும் போராடுகிறார்கள். இனம், மதம் என்ற போர்வையில் இரத்தம் சிந்த வைக்கவே முயல்கின்றனர். 225 பாராளுமன்ற உறுப்பினர்களே இலங்கையை அதலபாதாளத்துக்குள் தள்ளியுள்ளனர். அவ்வாறானதொரு தரப்பினருக்கு மீண்டும் ஆட்சியை கைப்பற்ற இடமளித்தால் எமது நாட்டு மக்கள் இதற்கு மேலாக எரிந்து சாம்பலாகி காற்றில் கரைந்து விடுவார்கள் என மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி கலாநிதி வலவாஹங்குன வெவே தம்மரதன தேரர் தெரிவித்தார்.

மிஹிந்தலை விகாரையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதிகாரத்தை கைப்பற்றவே அனைத்து தரப்பினரும் போராடுகிறார்கள். இனம், மதம் என்ற போர்வையில் இரத்தம் சிந்த வைக்கவே முயல்கின்றனர்.

இதற்கு சிறந்த உதாரணமே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவமாகும். நாட்டு மக்கள் என்ற வகையில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் துன்பத்தையே அனுபவித்து வருகிறோம். நாட்டு மக்களே பயங்கரவாதிகளுடன் இனியும் தொடர்பு கொள்ளாதிர்கள்.

225 பாராளுமன்ற உறுப்பினர்களே இலங்கையை அதள பாதாளத்துக்குள் தள்ளியுள்ளனர். அவ்வாறானதொரு தரப்பினருக்கு மீண்டும் ஆட்சியை கைப்பற்ற இடமளித்தால் எமது நாட்டு மக்கள் ஆகிய நீங்கள் இதற்கு மேலாக எரிந்து சாம்பலாகி காற்றில் கரைந்து விடுவீர்கள். அதன் பிறகு இந்த நாடும் அழிந்து விடும்.

இன்று பௌத்த தேரர்கள் ஆலய குருக்கள் மௌலவிமார்கள் அல்லது அருட்தந்தைகளை அழைத்து அரசியல்வாதிகள் ஆசி வாங்கிக் கொள்கின்றனர்.

இது நாட்டு மக்களுக்கு செய்யும் துரோகச் செயல் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். சர்வ மதத்தலைவர்களே நாட்டு ஒன்றிணைய வேண்டும். தொடர்ந்தும் ஏமாறக்கூடாது.

மேலும் நாட்டில் புதிய சட்டங்களை கொண்டு வந்து சுதந்திரமாக கருத்து தெரிவிக்கும் உரிமையையும் இல்லாமல் செய்யப் பார்க்கிறார்கள்.

நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தினூடாகவும் அதுவே நடக்க இருக்கிறது.இதுபோன்று அரசாங்கத்துக்கு எதிராக கருத்துக்களை வெளியிட வேண்டாம் என எனக்கு பல அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன.

எனது உயிருக்கும் இன்றும் கூட அச்சுறுத்தல் உள்ளது. இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தேன். ஆனால் இதுவரையில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

நான் அரசாங்கத்துக்கு சார்பாக செயற்பட்டிருந்தால் அந்த குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருப்பார்கள். ஆனால் நான் மக்கள் சார்பில் செயற்படுகின்றமையால் இதுவரையில் எதுவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை-என்றார்.

# பெரும்போக கால செய்கைக்கு 13 வகை பயிர்களுக்கு அனுமதி

கொழும்பு, செப். 26

எதிர்வரும் பெரும்போகத் தின்போது 13 வகையான போகப் பயிர்களை பயிரிட இணக்கம் காணப்பட்டுள்ளது.

விவசாய திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ள போகப் பயிர்கள் தொடர்பான தலைவர்கள் மற்றும் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர ஆகியோருக்கு இடையே அண்மையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது குறித்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

நெல், சோளம், மிளகாய், உருளைக்கிழங்கு, சிறிய வெங்காயம், பெரிய வெங்காயம், பயறு, கௌப்பி, சோயா, போஞ்சி, குரக்கன், கொண்டைக்கடலை, உளுந்து, நிலக்கடலை போன்ற பயிர்களைப் பயிரிடுவதற்கே இவ்வாறு இணக்கம் காணப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெரும்போகத்தில் நெல் அறுவடை மேற்கொள்ளப்படும் வரை, தேவையான அரிசி மற்றும நெல் தொகை நாட்டில் காணப்படுவதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பஸ்ஸை நிறுத்தி சாரதி கடத்தல்!

கம்பளை பிரதேசத்தில் பஸ் சாரதி ஒருவர் கடத்தப்பட்டுள்ளார். நேற்று முன் தினம் காலை மாவெலயில் இருந்து கம்பளை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் சாரதியே இவ்வாறு கடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் ஓடிக்கொண்டிருந்த போது வான் ஒன்றை நிறுத்தி பஸ்ஸூக்கு தடையை ஏற்படுத்தியே அதன் சாரதியை கடத்திச் சென்றதாகக் கூறப்படுகிறது.

கடத்தப்பட்டவர் வத்தேகம பகுதியைச் சேர்ந்த 46 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

யார் என்ன காரணத்துக்கு இந்த கடத்தலை மேற்கொண்டனர் என்பது இதுவரை வெளியாகவில்லை. கம்பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

## சிங்கள...

செய்யாமல், எம்மிடம் எஞ்சி இருக்கும் கல்வி வாய்ப்புகளையும் பிடுங்க முயலும் இத்தகைய போலி நல்லிணக்கத்துக்கு கொழும்பு மாவட்ட எம்பியான இந்த மனோ கணேசன் ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டேன்."

-இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

கொழும்பு கல்வி வலயத்தில் வட கொழும்பு கோட்டத்தில், கலைமகள் தமிழ் வித்தியாலயத்துடன் அருகாமை சிங்கள மொழி பாடசாலையை இணைக்கும் இரகசிய முயற்சி தொடர்பில் மனோ எம். பி, கொழும்பு கல்வி வலய பணிப்பாளர் தேவபந்துவுக்கு தொலைபேசியில் அறிவித்து விட்டு, எழுத்து மூலம் அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது-

தேசிய நல்லிணக்கம் என்ற பெயரில் ஒரு அரசு சார்பற்ற தொண்டு நிறுவனம் ஒன்றின் ஆதரவுடன் இந்த முயற்சியை ஒருசில மதத்தலைவர்கள் செய்ய முயல்கிறார்கள். ஒரு கீழ்மட்ட அரசியல்வாதியும் இதில் தொடர்புற்றுள்ளார்.

கொழும்பு மாவட்ட எம்.பியான எனக்கு தெரியாமல் செய்யப்படும் இந்த இரகசிய முயற்சி பற்றி கலைமகள் தமிழ் பாடசாலை பெற்றோர்கள் எனக்கு புகார் செய்துள்ளார்கள்.

ஆகவே என்னிடம் விளையாட வேண்டாம். நான் இதற்கு இடம் கொடுக்கமாட்டேன். மாவட்டங்களின் கல்வி நிர்வாக சீர்திருத்தங்களுக்கு எனது நண்பர் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் முயற்சிகளுக்கு நான் ஒத்துழைப்பு வழங்குகிறேன்.

அவை பற்றி பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சு ஆலோசனை குழு, கல்வி மேற்பார்வை குழு, கொழும்பு மாவட்ட மற்றும் பிரிவு ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் நாம் பார்த்துக்கொள்கிறோம்.

அதிகாரமும், மக்கள் ஆணையும் இல்லாத நபர்களின் தேவையற்ற நடவடிக்கைகளுக்கு இடம் கொடாதீர்.

உண்மையான நல்லிணக்கம் உருவாக, வளர்ச்சியடைந்த கொழும்பு பாடசாலைகளான றோயல் கல்லூரி, இசிபதன கல்லூரி, டீ.எஸ். சேனநாயக்க கல்லூரி ஆகியவற்றில் திட்டமிட்டு குறைக்கப்படும் தமிழ் வகுப்புகளை கூட்டுங்கள்.

வளர்ச்சியடைந்த ஆனந்தா கல்லூரி, நாலந்தா கல்லூரி, விசாகா கல்லூரி ஆகியவற்றில் தமிழ் மொழி பிரிவுகளை ஆரம்பியுங்கள். இதன் மூலம் தமிழ் மொழி மூல பிள்ளைகளுக்கு வளர்ச்சியடைந்த நல்ல கல்வி வாய்ப்புகளை வழங்குங்கள். இதை செய்யாமல், எம்மிடம் எஞ்சி இருக்கும் கல்வி வாய்ப்புகளையும் பிடுங்க முயலும் இத்தகைய போலி நல்லிணக்கத்துக்கு கொழும்பு மாவட்ட எம்.பியான இந்த மனோ கணேசன் ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டேன்." -என்றுள்ளது. (அ)

## நாணய நிதிய...

சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போதைய அரசு செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. அரசு உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதன் மூலம் உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப நிதிய மிகுதியில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பு குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நாணய நிதிய பிரதிநிதிகளிடம் தெளிவுபடுத்தினார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தவுடன் எட்டப்பட்ட ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து மக்களுக்கு சாதகமான உடன்பாட்டை மேற்கொண்டு அதன் மூலம் நாட்டை கட்டியெழுப்புவதற்கான மூலோபாயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்படும் என்றும் சஜித் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாசிம், பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், வேலுகுமார் மற்றும் ஹர்ஷன ராஜகருணா ஆகியோரும் இதில் பங்கேற்றிருந்தனர். (அ)

## சர்வதேசம்...

இடையில் வித்தியாசம் காணப்படுகின்றது.

எதிர்க்கட்சியின் கொள்கையிலேயே இந்த நாட்டில் அதிகமானோர் இருக்கின்றார்கள். அது தான் இந்த உண்மைகளை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும் என்பது. இந்த தாக்குதலாம் சுமார் 15 நாடுகளின் பிரஜைகள் உயிரிழந்திருக்கின்றார்கள். ஆகவே, சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய அனைவருக்கும் சாதாரணமான விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

எதிர்க்கட்சியினர் இராணுவத்தினருக்கு சேறு பூச நினைக்கின்றார்கள் என்று பலரும் கூறுகின்றார்கள்.

அவ்வாறு எதுவும் இல்லை. கடந்த பல வருடங்களாக பாராளுமன்றத்தில் சரத் பொன்சேகாவுக்கு அருகில்தான் அமர்கின்றேன்.

தனிப்பட்ட ரீதியிலும் அவர் எனக்கு பல விடயங்களை கூறியிருக்கின்றார். வருடக்கணக்காக இடம்பெற்ற யுத்தத்தில் போராடி முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்தினரை குறை சொல்வதற்கு எங்களிடம் ஒன்றும் இல்லை.

ஆனாலும் சில நபர்கள் குறித்து சில கேள்விகள் எழுந்துள்ளன. ஆகவே இது தொடர்பில் தேடி பார்ப்பதற்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பெரும் தேவை ஒன்று இருக்கின்றது-என்றார். (அ)

## முன்னாள் டி. ஐ....

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05ஆம் திகதி கஹவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். அத்துடன், மேலும் சிலர் காயமடைந்திருந்தனர்.

துப்பாக்கிச் சூடு தொடர்பில் விசாரணை நடத்திய கஹவத்தை பொலிஸாரால் சம்பவம் தொடர்பில் சந்தேகநபராக அடையாளம் காணப்பட்ட அப்போதைய பிரதியமைச்சர் பிரேமலால் ஜயசேகரவை கைது செய்வதற்கு ஆயத்தமான வேளை, அவரை கைது செய்ய வேண்டாம் என கஹவத்தை பொலிஸ் நிலையத்தின் அப்போதைய பொறுப்பதிகாரி லலித் ராஜமந்திரிக்கு அழுத்தம் கொடுத்ததமை தொடர்பில் அவர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்து. (அ)

## புலிகளின்...

புதைக்கப்பட்டன என்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே இந்த அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், தடையவியல் பொலிஸார், இராணுவத்தினர், குறித்த பகுதிக்குரிய கிராம அலுவலர் உள்ளிட்டவர்களின் பங்கேற்புடன் இந்த அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த முதலாம் நாள் அகழ்வுப் பணிகளின்போது சில தகரங்கள் மாத்திரம் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

அதேவேளை தொடர்ந்து இரண்டாம் நாள் அகழ்வுப்பணிகள் இன்று முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பருத்தித்துறை...

பருத்தித்துறை - மருதடி பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவு தூபியில் முன்னெடுக்கப்பட்ட நினைவேந்தலின் போது பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர். (அ)

# சு.கவில் இணையத் தயாராகும் 16 பாராளுமன்ற உறுப்பினர்கள்

கொழும்பு, செப். 26

சுதந்திரக் கட்சியில் இருந்து விலகி பொதுஜன பெரமுனவில் இணைந்து கொண்ட 16 பாரா ளுமன்ற உறுப்பினர்கள் மீண் டும் கட்சியில் இணைவது தொடர்பாக அந்த கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் உள்ள முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் இந்த கலந்து ரையாடல் இடம்பெற்றது.

சுதந்திரக் கட்சியின் முன் னாள் உறுப்பினரும் பாராளு மன்ற உறுப்பினருமான அனுர பிரியதர்ஷன யாப்பா, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பின் முன்னாள் பொதுச் செய லாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, அமைச்சர் நளின் பெர்னாண்டோ உள்ளிட்ட பொதுஜன பெரமுனவில் இருந்து பாராளுமன்றிக்கு தெரி வான 16 பேர் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களான அமைச்சர் மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச் சர்களான லசந்த அழகியவன்ன, ஜகத் புஸ்பகுமார மற்றும் பாரா ளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க, ஆகியோரும் முன்னாள் ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேனவுடன் இடம் பெற்ற குறித்த கலந்துரையாட லில் கலந்துகொண்டனர்.

சுமார் 2 மணித்தியாலங்கள் இடம்பெற்ற இந்த கலந்துரை யாடலில் குறித்த 16 பேரும் மீண்டும் சுதந்திரக் கட்சியில் இணைவது தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# ரூ. 30 கோடி பெறுமதியான கொக்கெய்னுடன் கென்ய பிரஜை விமான நிலையத்தில் சிக்கினார்!

கொழும்பு, செப். 26

300 மில்லியன் ரூபா பெறும தியான கொக்கெய்ன் போதைப் பொருளுடன் கென்யப் பிரஜை யொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகாளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எத்தியோப்பியாவில் இருந்து வரும்போதே 26 வயதான குறித்த கென்யப் பிரஜை சுமார் 4 கிலோ நிறையுடைய கொக்கெய்ன் போதைப் பொருளை எடுத்துவந்துள்ளார்.

கென்யப் பிரஜை எத்தியோப்பியாவின் அடிஸ் அபாபாவிலி ருந்து கட்டாரின் டோஹாவுக்கு வந்து அங்கிருந்து கட்டார் ஏயார்வேஸ் விமானம் ஊடாக கட்டுநாயக்க விமான நிலை யத்தை வந்தடைந்துள்ளார்.

அவரது பயணப் பொதியில் 3 பிஸ்கட் ரின்களில் 04 கிலோ எடையுள்ள 180 கொக்கெய்ன் வில்லைகள் மறைத்து வைக்கப் பட்டிருந்த நிலையில், அவற்றை சுங்க அதிகாரிகள் கைப்பற்றி யுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட கென் யப் பிரஜை முதல் தடவையாக இலங்கைக்கு வந்திருந்த நிலை யில், மேலதிக விசாரணைகளுக் காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளார். (அ)

# பெரும்போகத்தில் 13 வகையான பயிர்களைப் பயிரிட இணக்கம்!

கொழும்பு, செப். 26

எதிர்வரும் பெரும்போகத் தில் 13 வகையான போகப் பயிர் களை பயிரிட இணக்கம் காணப் பட்டுள்ளது.

விவசாயத் திணைக்களத்தி னால் நியமிக்கப்பட்டுள்ள போகப் பயிர்கள் தொடர்பான தலைவர்கள் மற்றும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர ஆகியோருக்கு இடையே அண் மையில் இடம்பெற்ற கலந்துரை யாடலின் போது குறித்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

நெல், சோளம், மிளகாய், உருளைக் கிழங்கு, சிறிய வெங்காயம், பெரிய வெங்காயம், பயறு, கௌப்பி, சோயா, போஞ்சி, குரக்கன், கொண்டைக்கடலை, உளுந்து, நிலக்கடலை போன்ற பயிர்களைப் பயிரிடுவதற்கே இவ்வாறு இணக்கம் காணப்பட் டுள்ளது.

எதிர்வரும் பெரும்போகத் தில் நெல் அறுவடை மேற் கொள்ளப்படும் வரை, தேவை யான அரிசி மற்றும நெல் தொகை நாட்டில் காணப்படுவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# "2 பயங்கரமான சட்டங்கள் கொண்டு வரவுள்ளது அரசு"

கொழும்பு, செப். 26

அரசாங்கம் அண்மையில் கொண்டு வந்த இணையத்தள பாதுகாப்பு சட்ட மூலம் மூலம் பொதுமக்களின் உரிமைகள் பறிக்கப்படும் எனவும் அது மிகவும் பயங்கரமான சட்டமூலம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சுதந்திர மக்கள் காங்கிரஸின் பிரதான அலுவலகத்தல் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொது மக்களின் எதிர்ப்புகளை அடக்க அரசாங்கம் பல்வேறு சட்டங்களை கொண்டு வருகின்றது.

உத்தேச இணையத்தள பாதுகாப்புச் சட்டமூலத்தின் ஊடாக ஸ்தாபிக்கப்படவுள்ள ஆணைக்குழுவின் 5 உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிப்பார்.

இதனால், அவர்கள் அரசியலமைப்பு பேரவைக்கு பொறுப்புக்கூற மாட்டார்கள். அவர்களுக்கு தேவ அதிகாரம் கிடைக்கும்.

அரசாங்கம் கொண்டு வந்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் இணையத்தள பாதுகாப்பு சட்டம் என்பன நிறைவேற்றப்பட்டால், அரசியல், பொருளாதார. சமூக ரீதியான பல பிரச்னைகளை எதிர்நோக்க நேரிடும்.

இந்த இரண்டு சட்டமூலங்களும் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட பின்னர், அவற்றை உயர் நீதின்றத்தில் சவாலுக்கு உட்படுத்த எதிர்க்கட்சிகள் தயாராக உள்ளன-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# சரத் வீரசேகரவுக்கு விஸா வழங்க மறுத்த அமெரிக்கா

## சபாநாயகரிடம் முறையிட முடிவு

கொழும்பு, செப். 26

**அமெரிக்காவின் வொஷிங்டனில் அடுத்த மாத இறுதியில் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்துகொள்வதற்காக தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகரவுக்கு விஸா வழங்குவதை அமெரிக்கா தவிர்த்து வருவதாக அறிய முடிகிறது.**

யு.எஸ்.டி.ஏ. மற்றும் ஜனநாயகத்திற்கான தேசிய நிறுவனம் ஆகியவை தற்போதைய பாராளுமன்றத்தில் செயல்படும் ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர்களையும் வொஷிங்டனுக்கு பத்து நாள் பட்டறைக்கு அழைத்துச் செல்ல திட்டமிட்டுள்ளன.

துறைசார் மேற்பார்வைக் குழுவின் அனைத்து தலைவர்களும் விஸாவைப் பெறவேண்டும் என்று அமெரிக்கா கூறுகிறது.


ஆனால், தேசிய பாதுகாப்பு மேற்பார்வைக் குழுவின் தலைவருக்கு குறிப்பிட்ட நேரத்திற்குள் விஸா வழங்கப்படவில்லை.

இதன்படி, வொஷிங்டன் விஜயத்துக்கான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர்கள் பட்டியலில் இருந்து தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகரவின் பெயர் நீக்கப்படவேண்டும் என்றும், வேறு ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும் என்றும் செயலமர்வு ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் சபாநாயகரிடம் முறைப்பாடு செய்யவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபயவை பதவி நீக்கம் செய்ய கடந்த வருடம் முன்னெடுக்கப்பட்ட மக்கள் போராட்டத்தின் பின்னணியில் அமெரிக்கா இருப்பதாக தாம் வெளிப்படுத்தியமை காரணமாக இவ்வாறு அமெரிக்கா விஸாவை வழங்குவதை தவிர்த்து வருவதாக சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். (அ)

## ரணில் இன்று ஜேர்மன் பயணம்!



கொழும்பு, செப். 26

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று ஜேர்மனிக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

'பேர்ளின் குளோபல்' மாநாட்டில் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றுவதற்காகவே ஜனாதிபதி அங்கு செல்கின்றார். செப்ரெம்பர் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் இந்த மாநாடு நடைபெறுகின்றது.

இவ்விஜயத்தின்போது ஜேர்மன் அதிபர், அரசியல் தலைவர்கள் மற்றும் வர்த்தக பிரமுகர்களுடன் ஜனாதிபதி சந்திப்புகளை நடத்தவுள்ளார். (அ)

# கனடாவில் பொலிஸ்காரராக நடித்து சிறுமியை துஷ்பிரயோகம் செய்த தமிழ் இளைஞர் கைது!

ஒன்ராரியோ, செப். 26

கனடாவில் ஒன்ராரியோ மாகாணத்தில் தமிழர்கள் செறிந்துவாழும் பகுதியான பிரம்ரனில், 13 வயதான சிறுமி ஒருவரை பாலியல் வன்புணர்விற்குட்படுத்திய குற்றச்சாட்டில் இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

33 வயதான அனுஷன் ஜெயக்குமார் என்ற சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என பீல் பிராந்திய பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் வியாழன் மதியம் இடம்பெற்றுள்ளது. 13 வயதுச் சிறுமி ஒரு பிளாசா வழியாக நடந்து சென்று கொண்டிருந்தபோது, தெரியாத நபர் ஒருவர் சிறுமியை அணுகியதாக பீல் பிராந்திய பொலிஸார் கூறினர்.

அவர் தன்னை ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் என்று கூறி, பின்னர் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்தார் எனக் கூறப்படுகிறது.

சனிக்கிழமையன்று, அனுஷன் ஜெயக்குமார் என்ற சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். அவர் பொலிஸ் உத்தியோகத்தராக ஆள் மாறாட்டம் செய்தல், வலுக்கட்டாயமாக சிறையில் அடைத்தல், பாலியல் வன்கொடுமை மற்றும் பாலியல் குறுக்கீடு ஆகிய குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார்.

சந்தேகநபரின் புகைப்படத்தை வெளியிட்டுள்ள பொலிஸார், சந்தேகநபரால் மேலும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம் எனவும் அவ்வாறானவர்கள் இருந்தால் தம்மை தொடர்புகொள்ளுமாறும் கேட்டுள்ளனர். (அ)

## தாதியர்கள் சங்கம் இன்று போராட்டம்

கொழும்பு, செப். 26

அரச தாதியர் சங்கத்தினர் இன்று செவ்வாய்க்கிழமை சுகாதார அமைப்புக்கு முன்பாக மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை மேற்கொள்ள உள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் அறிவித்துள்ளது.

தாதியர்களின் யாப்பில் இரகசியமாக திருத்தம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராகவே இந்த போராட்டத்தை தாதியர் சங்கத்தினர் மேற்கொள்ள உள்ளனர்.

சங்கத்தின் தலைவர் எஸ்.பி. மெடிவத்த இந்த போராட்டம் தொடர்பில் கருத்து வெளியிடுகையில்-

தாதியர் பற்றாக்குறையினால் வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காணவேண்டிய நிலையில், அதிகாரிகள் தாதியர் யாப்பில் திருத்தங்களை மேற்கொள்ளும் வரைவை இரகசியமாக தயாரித்துள்ளனர். அந்த நடவடிக்கை உடனடியாக கைவிடப்படவேண்டும்-என்றார்.

எவ்வாறாயினும், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு, நாட்டின் சுகாதார அமைப்பில் உள்ள குறைபாடுகளை சரி செய்வதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார். (அ)

# போதை வியாபாரிகளுக்கு எதிராக சிங்கப்பூர் போல் சட்டம் வேண்டும்!

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை



கொழும்பு, செப். 26

முக்கிய பிரமுகர்களுக்கான சிறப்புரிமைகளை பயன்படுத்தி விமான நிலையத்தின் ஊடாக தங்கத்தை கொண்டு வந்த பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக சகல உறுப்பினர்களும் இணைந்து ஏகமனதாக தீர்மானம் ஒன்றை கொண்டு வந்ததை போல் மது,புகையிலை மற்றும் போதைப்பொருள் பாவனையில் இருந்து நாட்டை காப்பாற்ற 225 பேரும் இணைந்தால் நாட்டுக்கு முன்னுதாரணமாக செயற்பட முடியும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

போதைப்பொருள் வியாபாரிகளுக்கு எதிராக சிங்கப்பூரில் நடைமுறையில் உள்ளதை போல் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

போதைப் பொருளை கட்டுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவது தொடர்பான விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டத்தில் எதிர்க்கட்சி தலைவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சில அதிகாரிகள் நிறுவனங்களின் கைப்பாவையாக மாறியுள்ளதன் பின்னணி காரணமாக புகையிலை மற்றும் மதுபானம் சம்பந்தமான வரி வருமானம் நாட்டுக்கு சரியாக கிடைப்பதில்லை.

இதனை தகர்த்தெறிய 225 பேரும் இணைந்து சட்டத்தை நிறைவேற்ற சந்தர்ப்பம் கிடைக்கும்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள், சிறைச்சாலைகளில் இருந்தவாறும் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுகின்றனர்.

இவர்களுக்கு எதிராக சிங்கப்பூரில் நடைமுறையில் உள்ளதை போல் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இதன் மூலம் தற்போது பாடசாலை கட்டமைப்பையும் பீடித்துள்ள போதைப் பொருள் வியாபாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்-என்றார். (அ)

## அவிசாவளை துப்பாக்கிச்சூடு தொடர்புடைய 4 பேர் கைது!

கொழும்பு, செப். 26

அவிசாவளை தல்துவ பகுதியில் ரி56 துப்பாக்கியால் முச்சக்கரவண்டி மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்த சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்களை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளதாக அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களுக்குத் தகவல் வழங்கியமை, துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களுக்கு முச்சக்கர வண்டி மூலம் போக்குவரத்து வசதிகளை வழங்கியமை, உதவி செய்தமை போன்ற காரணங்களுக்காக இந்தக் குழு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் ஊடகவியலாளர் ஒருவரும் அடங்குவதாகவும் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

கடந்த 21ஆம் திகதி இரவு, கேகாலை பகுதியில் உள்ள மரண வீடொன்றுக்கு முச்சக்கர வண்டியில் பயணித்த குழுவினரை இலக்கு வைத்து இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவத்தை தற்போது டுபாயில் மறைந்திருக்கும் மன்னா ரமேஷ் என்பவர் நடத்தியதாகக் கிடைத்த தகவலின்படி, விசேட அதிரடிப்படையின் கொனஹேன முகாமின் விசேட புலனாய்வுப் பிரிவினரால் இந்தக் குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஆஸிக்கு எதிரான தொடரை கைப்பற்றியது இந்திய அணி!




அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் வெற்றிபெற்று இந்திய அணி தொடரை வென்று அசத்தியுள்ளது.

இந்தூரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி, களமிறங்கிய இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர் ருதுராஜ் கெயிக்வாட் 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய ஷ்ரேயாஸ் ஐயர் ஷுப்மன் கில் உடன் இணைந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்திய அணி 9.5 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 79 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழை பெய்ததால் ஆட்டம் தடைப்பட்டது.

இதன்பின் மீண்டும் ஆட்டம் தொடங்கினாலும் கில், ஷ்ரேயஸ் ஜோடியைப் பிரிக்க முடியாமல் அவுஸ்தி ரேலிய அணி வீரர்கள் திணறினர். இருவரும் நாலா பக்கமும் கிடைத்த பந்துகளை சிக்சர், பௌண்ட்ரிகளாக விளாசி ஓட்டங்களை குவித்தனர். அடுத்தடுத்து இருவரும் சதமடித்து அசத்தினர்.

ஷ்ரேயஸ் 86 பந்துகளில் 3 சிக்சர், 10 பௌண்ட்ரிகள் உள்பட சதமெடுத்து 105 ஓட்டங்களில் விக்கெட்டை பறிகொடுத்தார். அதேபோல் ஷுப்மன் கில் 92 பந்துகளில் 4 சிக்சர், 6 பௌண்ட்ரி உள்பட சதமெடுத் தவர் 104 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 2வது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 200 ஓட்டங்கள் சேர்ந்த நிலையில் பிரிந்தது. இதனைத் தொடர்ந்து இஷான் கிஷன் 31 ஓட்டங்கள், கே.எல்.ராகுல் 52 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதன்பின் சூர்யகுமார் யாதவ் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

குறிப்பாக, கமரூன் கிரீன் வீசிய 43ஆவது ஓவரில் சூர்யகுமார் தொடர்ந்து 4 சிக்ஸர்கள் அடித்து அசத்த இறுதியில், இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 399 ஓட்டங்களை குவித்தது. சூர்யகுமார் யாதவ் 72 ஓட்டங்கள் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதையடுத்து, 400 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு பிரசித் கிருஷ்ணா ஆரம்பமே அதிர்ச்சி கொடுத்தார். மேதிவ் ஷாட் 9 ஓட்டங்களிலும், அணித்தலைவர் ஸ்டீவ் ஸ்மித் ரன் எடுக்காமலும் விக்கெட்டை பறிகொ டுத்தனர். இதன்பின் வோர்ணர் மற்றும் லபுஷேன் இணைந்து ஆடினர். ஒருகட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 9 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 56 ஓட்டங்கள் எடுத்த சமயத்தில் மழை குறுக்கிட ஆட்டம் தடைப்பட் டது.

ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆட்டம் தடைப்பட் டதால் 33 ஓவர்களுக்கு 317 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. என்றாலும், 28.2 ஓவர்களுக்கு அவுஸ்திரேலிய அணி 217 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. இதனால் 99 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது. ஏற்கனவே முதல் ஒருநாள் போட்டி யில் வென்ற இந்திய அணி, இந்தப் போட்டியிலும் வென்று தொடரை கைப்பற்றி அசத்தியுள்ளது.

# பாகிஸ்தான் அணி இந்தியா வர வீசா



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி, இந்தியா வர வீசா வழங்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அந்த அணி இந்தியாவில் நடைபெற உள்ள உலகக் கோப்பை தொடரில் பங்கேற்று விளையாட உள்ளது குறிப்பிடத்தக்கது. வரும் புதன்கிழமை (செப்.27) மாலை பாகிஸ்தான் அணி, டுபாயில் இருந்து ஹைதராபாத் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

'உலகக் கோப்பை கிரிக்கெட்-2023' தொடர் ஒக்ரோபர் 5ஆம் திகதி முதல் நவம்பர் 19ஆம் திகதி வரை இந்தியாவில் உள்ள 10 நகரங்களில் நடைபெறவுள்ளது. தொடரை இந்தியா நடத்துகிறது. மொத்தம் 48 போட்டிகள். தொடரில் இலங்கை, இந்தியா, நடப்பு சம்பியன் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, நியூஸ லாந்து, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய 10 நாடுகள் பங்கேற்கின்றன. இந்த நிலையில் பரிசுத் தொகை குறித்த அறிவிப்பை ஐ. சி. சி. வெளியிட்டுள்ளது.

இந்த தொடருக்கான பாகிஸ்தான் அணியை அண்மையில் அறிவித்தது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை. இந்த தொடரில் ஒக்ரோபர் 6ஆம் திகதி நடைபெறும் போட்டியில் நெதர்லாந்து அணியுடன் பாகிஸ்தான் விளையாடுகிறது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி, ஒக்ரோபர் 14ஆம் திகதி நடைபெற உள்ளது.

இந்த சூழலில் கடந்த வெள்ளிக்கிழமை அன்று பாகிஸ்தான் அணி, இந்தியா வருவதற்கான வீசா கிடைப்பதில் சிக்கல் இருப்பதாக தகவல் வெளியானது. இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சர்வதேச கிரிக்கெட் சபையிடம் (ஐசிசி) முறையிட்டது. இந்நிலையில் தற்போது அந்த அணிக்கு விசா வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அந்த அணி வீரர்கள் வரும் புதன்கிழமை அன்று ஹைதராபாத் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 29ஆம் திகதி நியூஸிலாந்து அணியுடன் பயிற்சி ஆட்டத்தில் பாகிஸ்தான் விளையாடுகிறது.

# குறைந்த போட்டிகளில் ஷுப்மன் கில் 6 சதங்கள்




இந்தூர், செப். 26

குறைந்த ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் 6 சதங்களை விளாசி இந்திய அணியின் தொடக்க வீரர் ஷுப்மன் கில் சாதனை படைத்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த போட்டியில் ஷுப்மன் கில் 92 பந்துகளில் 4 சிக்சர், 6 பௌண்ட்ரி உள்பட சதமெடுத் தவர் 104 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

ஒரு வருடத்தில் 5 அல்லது அதற்கு மேற்பட்ட சதங்களை எடுத்த இந்திய வீரர்கள் வரிசையில் ஷுப்மன் கில்லும் இணைந்தார். இதற்கு முன்பு இந்தச் சாதனையை விராட் கோலி (4 முறை), ரோஹித் சர்மா (3 முறை), சச்சின் டெண்டுல்கர் (2 முறை), ராகுல் திராவிட், சவுரவ் கங்குலி, ஷிகர் தவண் (தலா ஒரு முறை) ஆகியோர் செய்திருந்தனர்.

மேலும் குறைந்த ஒரு நாள் போட்டிகளிலேயே 6 சதங்களை விளாசியவர் என்ற சாதனையை ஷுப்மன் கில் படைத்தார். ஷுப்மன் கில் 35 போட்டிகளிலேயே இந்த சாதனையைப் படைத்துள்ளார். முன்னதாக ஷிகர் தவான் 46 போட்டிகளிலும், கே.எல்.ராகுல் 53 போட்டிகளிலும், விராட் கோலி 61 போட்டிகளிலும், கவுதம் கம்பீர் 69 போட்டிகளிலும் இந்த சாதனையைப் படைத்திருந்தனர்.

# கும்ப்ளேயின் சாதனையை முறியடித்தார் அஸ்வின்




இந்தூர், செப். 26

நேற்று 41 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களைக் கைப்பற்றினார் அஸ்வின். இதில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அதிக விக்கெட்களை வீழ்த்திய அனில் கும்ப்ளே சாதனையை முறியடித்துள்ளார் அஸ்வின்.

அஸ்வின், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அனைத்து வடிவங்களிலும் 48 ஆட்டங்களில் 144 விக்கெட்களைக் கைப்பற்றி முதலிடம் பிடித்தார். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர்களில் இப்போது கும்ப்ளே 142 விக்கெட்களுடன் 2ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டார். அனில் கும்ப்ளே அவுஸ்தி ரேலியாவுக்கு எதிராக 20 டெஸ்ட் போட்டி களில் 111 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். 29 ஒருநாள் போட்டிகளில் 31 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

ரவிச்சந்திரன் அஸ்வின் 68 போட்டிகளில் 144 விக்கெட்டுகளைக் கைப்பற்ற, அனில் கும்ப்ளே 67 போட்டிகளில் 144 விக்கெட்களை அவுஸ்திரேலி யாவுக்கு எதிராகக் கைப்பற்றியுள்ளார். ஹர்பஜன் சிங் 74 போட்டிகளில் 129 விக்கெட்களைக் கைப்பற்றி 3ம் இடத்தில் உள்ளார். கபில் தேவ் 77 போட்டிகளில் 124 விக்கெட்களைக் கைப்பற்றி 4ஆம் இடத்தில் இருக்கின்றார். ரவீந்திர ஜடேஜா 78 போட்டிகளில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 128 விக்கெட்களைக் கைப்பற்றியுள்ளார்.

# தோல்வியுற்ற “வசந்தகால தாக்குதலுக்கு” மத்தியில் உக்ரேனிய ஜனாதிபதி வாஷிங்டனில் பேச்சு!

உக்ரேனின் தோல்வியுற்ற வசந்த கால தாக்குதலால் தூண்டப்பட்ட ஆழமான இராணுவ நெருக்கடிக்கு மத்தியில், உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் செலென்ஸ்கி கடந்த வியாழன் அன்று பல மணிநேரம் பென்டகனில் மூடிய கதவுகளுக்குப் பின்னால் நடந்த கூட்டத்தில் கலந்துகொண்டதோடு, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடென், மூத்த அமைச்சரவை அதிகாரிகள், அமெரிக்க செனட் மற்றும் முன்னணி சட்டமியற்றுபவர்களுடன் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டார்.



வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்தில் உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் செலென்ஸ்கியை ஜனாதிபதி ஜோ பைடென் சந்தித்தார். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் பைடென் மற்றும் செலென்ஸ்கியின் அச்சுறுத்தும் பேச்சுக்களைத் தொடர்ந்து இந்த சந்திப்புகள் நடந்தன. அங்கு செலென்ஸ்கி ரஷ்யர்களை “தீயவர்கள்” மற்றும் “பயங்கரவாதிகள்” என்று வகைப்படுத்தி இனரீதியாக குற்றம் சாட்டும் மொழியைப் பயன்படுத்தியபோது, பைடென் இந்த மோதலுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதை நிராகரித்தார்.

பல மாதங்களாக ஊடகங்கள் இது பற்றி பிரச்சாரம் செய்த போதிலும், உக்ரேனிய தாக்குதல் இரத்தக்களரியான ஒரு தோல்வியாகும். அமெரிக்க உளவுத்துறை நிறுவனங்கள் அதன் நோக்கங்களை அடையத் தவறிவிட்டதை இப்போது ஒப்புக் கொண்டுள்ளன. கடந்த மாதத்தில், பைடென் நிர்வாகம் உக்ரேனின் பாதுகாப்பு அமைச்சகத்தில் உள்ள அனைத்து மூத்த அதிகாரிகளையும் மாற்றுவதற்கு வசதி செய்துள்ளதுடன், அமெரிக்கா மோதலில் இன்னும் நேரடியான பங்கை எடுக்க தயாராகி வருகிறது.

பாதுகாப்பு செயலாளர் லோயிட் ஒஸ்டின் உட்பட அமெரிக்க இராணுவ அதிகாரிகளுடனான சந்திப்புடன் செலென்ஸ்கி அன்றைய தினத்தைத் தொடங்கினார். “உக்ரேனின் நீண்டகால திறன் தேவைகள் மற்றும் ரஷ்யாவைத் தடுத்துநிறுத்தும் வகையில், எதிர்காலத்தில் அவற்றை எவ்வாறு ஆதரிப்பது என்பது குறித்து விவாதிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்ததாக” பென்டகன் தெரிவித்துள்ளது.

வெள்ளை மாளிகையில் இரண்டு மணி நேர சந்திப்புகளுக்குப் பிறகு, அமெரிக்கா உக்ரேனுக்கு பாரிய புதிய ஆயுதங்களை அனுப்பும் என்றும், ஆப்ராம்ஸ் யுத்த டாங்கிகள் உடனடியாக போர்க்களத்திற்கு வரத் தொடங்கும் என்றும் பைடென் அறிவித்தார்.

“இன்று, உக்ரேனுக்கான அமெரிக்க பாதுகாப்பு உதவிகளை, அடுத்த தவணைக்கு வழங்குவதற்கு நான் ஒப்புதல் அளித்துள்ளேன், இதில் அதிகமான பீரங்கிகள், அதிகமான வெடிமருந்துகள், அதிகமான டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் உட்பட, அடுத்த வாரம், முதல் அமெரிக்க ஆப்ராம்ஸ் டாங்கிகள் உக்ரேனுக்கு வழங்கப்படும்” என்று பைடென் கூறினார்.

சமீபத்திய ஆயுத விநியோகத்தில் கூடுதலாக கிளஸ்டர் கொத்துக் குண்டுகளும் அடங்கும். இந்த குண்டுகளில் வெடிக்காதவை, பரந்த பகுதியில் சிதறண்டு இருந்து ஆபத்துக்களை விளைவிக்கும். இவற்றுடன் சேர்த்து டசின் கணக்கான போர் வாகனங்கள் மற்றும் 3 மில்லியனுக்கும் அதிகமான வெடிமருந்துகளும் அதில் அடங்கும்.

“இந்த ஆண்டின் குளிர்கால மற்றும் இருண்ட நாட்களில் வெப்பம் மற்றும் ஒளியை வழங்கும் முக்கியமான உள்கட்டமைப்பைப் பாதுகாப்பதற்காக உக்ரேனின் வான் பாதுகாப்பு திறன்களை வலுப்படுத்துவதிலும் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். ஒவ்வொரு மாதமும் குளிர் காலத்தில் கூடுதல் **HAWK** மற்றும் பிற அமைப்புகளின் நிலையான விநியோகத்துடன் இரண்டாவது **HAWK** வான் பாதுகாப்பு பேட்டரியை வழங்குவதும் இதில் அடங்கும். மற்றும் ஏவுகன லோஞ்சர்கள் மற்றும் இன்டர்செப்டர்களின் புதிய தொகுப்பும் அடங்கும்” என்று பைடென் மேலும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பைத் தொடர்ந்து, “திரு. ஜனாதிபதி அவர்களே ! நாங்கள் உங்களுடன் இருக்கிறோம், நாங்கள் உங்களுடன் நிற்கிறோம்” என்று பைடென் அறிவித்தார்.

உக்ரேனிய இராணுவம் எதிர்கொள்ளும் தோல்வியை மறைக்க முடியாத நிலையில் இந்த அறிவிப்பு வந்துள்ளது. தொலைவில் இருந்து முன்னேறி வரும் உக்ரேனிய கவச வாகனங்கள் அழிக்கப்பட்டதை காட்டும் ரஷ்ய வீடியோக்களை ஆதாரமாக மேற்கோள் காட்டி, மீண்டும், உக்ரேனிய துருப்புக்கள் ஒரு திருப்புமுனையை உருவாக்குகின்றன என்று அமெரிக்க ஊடகங்கள் வெளியிட்டன.

அமெரிக்க வெளியுறவுக் கொள்கை அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி, மூத்த பத்திரிகையாளர் சீமோர் ஹெர்ஷ், அதே நாளில் மிகவும் யதார்த்தமான சித்திரத்தை வழங்கினார். “உண்மை நிலைமை என்னவென்றால், உக்ரேனிய இராணுவம் தாக்குதலைத் தொடர உத்தரவிட்டால், இராணுவம் கலகம் செய்யும். படையினர்கள் இனி மரணிக்கத் தயாராக இல்லை, ஆனால் இது பைடென் வெள்ளை மாளிகையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முட்டாள்தனத்துக்கு பொருந்தாது” என்று அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய தாக்குதலில் பல்லாயிரக் கணக்கான உக்ரேனிய துருப்புக்கள் இறந்துள்ளனர், இது போரில் இதுவரை உக்ரேனியரின் மொத்த இறப்பு எண்ணிக்கையை நூறாயிரக்கணக்கானதாக கொண்டு வரக்கூடும். ஜூலையில், நியூயார்க் டைம்ஸ், சில உக்ரேனிய இராணுவப் பிரிவுகள் அழிக்கப்பட்டு, பலமுறை மறுசீரமைக்கப்பட்டதாகவும், இப்போது “பழைய ஆட்களை போருக்கு கட்டாயப்படுத்துவதாகவும்” தெரிவித்தது.

செலென்ஸ்கி உடனான தனது சந்திப்பின் போது, பைடென் காங்கிரஸிடம் போருக்காக கூடுதலாக 24 பில்லியன் டொலர்கள் நிதியை வழங்குமாறு அழைப்பு விடுத்தார். “அமெரிக்க காங்கிரஸின் நல்ல தீர்ப்பை நான் நம்புகிறேன். இதற்கு வேறு மாற்றீடு இல்லை” என்று பைடென் கூறினார்.

செலென்ஸ்கி, ராணுவ பச்சை நிற உடையணிந்து, அமெரிக்க செனட்டில் ஒரு ரகசிய விளக்கத்தை அளித்தார். மாநாட்டைத் தொடர்ந்து, பெரும்பான்மைத் தலைவர் சக் மர் செனட்டர்களிடம், “எங்களுக்கு உதவி கிடைக்கவில்லை என்றால், நாங்கள் போரை இழப்போம்” என்று செலென்ஸ்கி கூறியதாக தெரிவித்தார்.

இதன் பிறகு, குடியரசுக் கட்சியின் சபாநாயகர் கெவின் மெக்கார்த்தி மற்றும் பிரதிநிதிகள் சபையின் இதர உறுப்பினர்கள் குழுவுடன் செலென்ஸ்கி ஒரு சிறிய சந்திப்பை நடத்தினார். சபையின் வெளியுறவுக் குழுவின் குடியரசுக் கட்சியின் தலைவரான மைக்கேல் மெக்கால், “அமெரிக்கா அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் கொடுக்கும்” என்று கூறினார், மேலும் அமெரிக்கா இறுதியில் உக்ரேனுக்கு நீண்ட தூர ஏவுகணையை வழங்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உக்ரேனுக்கு கூடுதலாக 24 பில்லியன் டொலர்களை அனுப்புவதற்கான வெள்ளை மாளிகையின் கோரிக்கையைக் குறிப்பிடும் வகையில், “இப்போது நிறைய அரசியல் சூழ்ச்சிகள் உள்ளன, ஆனால் நாங்கள் அதை நிறைவேற்றப் போகிறோம்” என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும், உக்ரேனுக்கான ஆதரவு குறைந்து வருவதை சபையில் தனது ஆதரவு குழுக்குள் வெளிப்படுத்திய மெக்கார்த்தி, காங்கிரஸின் கூட்டு அமர்வில் உரையாற்றும் பாக்கியத்தை செலென்ஸ்கிக்கு வழங்க மறுத்தார். அத்தோடு, கூட்டாட்சி அரசாங்கத்தின் ஒரு பகுதியளவு பணிநிறுத்தத்தை தவிர்க்க, உக்ரேன் இராணுவ உதவியை செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் நிறைவேற்ற வேண்டும் என்று தொடரும் தீர்மானம், சமீபத்திய வரைவில் இருந்து நீக்கப்பட்டது. சபையில், ட்ரம்புடன் இணைந்த வகையில், குடியரசுக் கட்சியினரின் வளர்ந்து வரும் ஒரு பகுதி, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உடனடி இலக்காக ரஷ்யாவை விட சீனாவை முதன்மைப்படுத்த விரும்புகிறது.

செவ்வாயன்று ஐக்கிய நாடுகள் சபையில் பைடென் ஆற்றிய உரையில், உக்ரேன் போரில், ரஷ்யா மட்டுமே பொறுப்பேற்க வேண்டும் என்று அறிவித்தார். இது, மோதலுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

பைடென் நிர்வாகம் 2024 ஜனாதிபதித் தேர்தலின் முடிவு, மோதலில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபடுவதை பாதிக்கும் என்று அஞ்சுகிறது. மற்றும் ரஷ்யாவுடன் நேரடி மோதலாக போரை விரிவுபடுத்துவதன் மூலம், மோதலை முடிவுக்கு கொண்டு வர முடியாத வகையில் “களத்தில் உண்மைகளை” உருவாக்க முயல்கிறது.

உக்ரேனிய தாக்குதல் தோல்வியடைந்ததால், உக்ரேனில் அமெரிக்காவின் இலட்சிய இலக்குகளை அடைவதற்கான ஒரே வழி மோதலில் அதன் தலையீட்டை பாரியளவில் அதிகரிப்பதுதான் என்று பைடென் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. இதில் ரஷ்யாவுடனான நேரடியான துப்பாக்கி சண்டையில், அமெரிக்க-நேட்டோ துருப்புக்களை நிலைநிறுத்துவதும் அடங்கும். ●

ஈழநாடு



# இந்தியா VS கனடா - நிஜ்ஜார் கொலை: கனடாவால் இந்தியாவுக்கு நெருக்கடி தர முடியுமா? சர்வதேச சட்டம் கூறுவது என்ன?



அண்மையில், காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் இந்திய ஏஜென்சிகளுக்கு தொடர்பு இருக்கலாம் என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ சந்தேகம் தெரிவித்திருந்தார்.

இந்த கடுமையான குற்றச்சாட்டிற்குப் பிறகு, இந்தியா மற்றும் கனடா நாடுகளுக்கு இடையேயான உறவில் பாதிப்பு ஏற்படத் தொடங்கியுள்ளது. கனடா தனது குற்றச்சாட்டிற்கு இதுவரை எந்த ஆதாரத்தையும் முன்வைக்கவில்லை. இருப்பினும் ஒரு விவாதம் வெடித்துள்ளது.

கனடாவின் குற்றச்சாட்டுகளை இந்தியா முழுமையாக நிராகரித்துள்ளது. மாறாக, அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற பல நாடுகள் கடந்த காலங்களில் மற்ற நாடுகளில் 'குறிவைத்து கொலை செய்யும்' நிகழ்வுகளை அரங்கேற்றி அவற்றை நேரடியாகவும் ஏற்றுக்கொண்டும் இருக்கின்றன.

உதாரணமாக, பாகிஸ்தானில் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டது. இந்த நடவடிக்கை சர்வதேச சட்டத்தை மீறுவதாக பல நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால் அமெரிக்காவிற்கு எதிராக நேரடியான கேள்வி எதுவும் எழுப்பப்படவில்லை.

இதுபோன்ற வழக்குகளில் சர்வதேச சட்டம் என்ன சொல்கிறது என்பதை அறியும் முன், இந்தியா மீது கனடா முன்வைக்கும் குற்றச்சாட்டுகளையும், இந்தியாவின் பதிலையும் பார்ப்போம்.

**கனடாவின் குற்றச்சாட்டுகள்**

கனடா பிரதமர் ட்ரூடோ செப்டம்பர் 18 அன்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது, 'கனடா மண்ணில் கனடா குடிமகன் ஒருவரைக் கொன்றதில் எந்தவொரு வெளிநாட்டு அரசின் பங்கையும் ஏற்றுக்கொள்ள முடியாது. அது நமது இறையாண்மையை மீறுவதாகும்," என்றார்.

இது தொடர்பாக, இந்தியாவின் உயர் உளவுத்துறை மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கனடா தனது கவலையை தெரிவித்திருந்தது.

'கடந்த வாரம் டெல்லியில் நடைபெற்ற ஜி20 மாநாட்டின் போது, இந்த தகவலை நானே நேரடியாக பிரதமர் நரேந்திர மோதியிடம் தெரிவித்திருந்தேன்."




ட்ரூடோவின் இந்த குற்றச்சாட்டை அடுத்து, இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையிலான உறவில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. முதலில் கனடா இந்திய தூதர் ஒருவரை வெளியேற்றியது. பின்னர் இந்தியா ஒரு கனடா தூதர் ஒருவரை வெளியேற்றியது.

கனடா செல்லும் தனது குடிமக்களுக்கு இந்தியா ஒரு பயண அறிவுரையை கூட வெளியிட்டுள்ளது .

மற்றொரு நடவடிக்கையில், கனடா குடிமக்களுக்கு விசா வழங்குவதை இந்தியா நிறுத்திவைத்துள்ளது.

அதை அங்குள்ள பாதுகாப்பு நிலவரத்துடன் இணைத்து, தொடர்ந்து ஆய்வு செய்யப்படும் என்று இந்தியா கூறியுள்ளது.

**அமெரிக்கா, ஆஸ்திரேலியா கூறுவது என்ன?**

நிஜ்ஜார் கொலையில் இந்திய ஏஜென்சிகள் மீது அச்சம் தெரிவித்த ட்ரூடோ, இந்தக் கொலை தொடர்பான விசாரணைக்கு இந்தியா ஒத்துழைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விசாரணையில் இந்தியா முழு வெளிப்படைத் தன்மையுடன் ஒத்துழைத்து உண்மையைக் கண்டறிய உதவ வேண்டும் என்றார்.

அமெரிக்காவும் ஆஸ்திரேலியாவும் கனடாவின் குற்றச்சாட்டுகள் தீவிரமானவை என்று விவரித்துள்ளன, மேலும் விசாரணைக்கு ஒத்துழைக்க இந்தியாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

மறுபுறம், இந்தியா தனது ஏஜென்சிகளுக்கு எதிரான நிஜ்ஜார் கொலை குற்றச்சாட்டுகளை முற்றிலும் நிராகரித்துள்ளது.

வியாழனன்று, இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி, "குற்றச்சாட்டிற்கு முன்னரோ அல்லது பின்னரோ கனடாவிலிருந்து எந்த உளவுத் தகவல்களும் வரவில்லை" என்றார். 'நாங்கள் எந்த குறிப்பிட்ட தகவலையும் பார்க்க விரும்புகிறோம். ஆனால் இன்னும் கனடா எங்களிடம் எதையும் காட்டவில்லை." என்றும் அவர் கூறினார்.

**"குறிவைத்துக் கொலை செய்வது" பற்றி வெடித்த விவாதம்**

நிஜ்ஜாரின் கொலையில் இந்தியா தனது ஏஜென்சிகள் எதற்கும் தொடர்பு இல்லை என்று மறுத்திருக்கலாம். ஆனால் இந்த விவகாரம் கிளம்பிய பிறகு, வெளிநாட்டில் இதுபோன்ற கொலைகள் நடந்ததாகக் கூறப்படுவது பற்றிய விவாதம் வெடித்துள்ளது.



அமெரிக்கா, இஸ்ரேல், ரஷ்யா போன்ற நாடுகள், தங்களின் எதிரிகளை அந்நிய மண்ணில் கொலை செய்த சம்பவங்கள் நடந்த நிலையில், சர்வதேச சட்டம் இது போன்ற கொலைகளை அனுமதிக்கிறதா?

ஒரு நாடு தனது எதிரியாகக் கருதப்படும் ஒருவரை அந்நிய மண்ணில் கொல்ல முடியுமா?

ஒரு நாட்டில் வெளிநாட்டு ஏஜென்சியால் நடத்தப்படும் இதுபோன்ற கொலைகள் அந்நாட்டின் இறையாண்மையை மீறும் சம்பவங்களா?

சர்வதேச சட்டம் இதை அனுமதிக்கிறதா?

இந்தக் கேள்விகளுக்கான பதில்களைக் கண்டுபிடிக்க முயற்சிப்போம்.

**மீறப்படும் இறையாண்மை**

சர்வதேச சட்டங்களின்படி, ஒரு நாட்டில் வெளிநாட்டு ஏஜென்சிகளால் குறிவைத்துச் செய்யப்படும் கொலைகள் அந்நாட்டின் இறையாண்மைக்கு எதிரானதாக கருதப்படும்.

அவ்வாறு செய்வது சம்பவம் நடக்கும் நாட்டின் இறையாண்மையை மீறுவதாகும்.

இது ஒரு நாடு மற்றொரு நாட்டின் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு மதிப்பளிக்கும் அடிப்படைச் சட்டத்தையும் மீறுவதாகும்.

அனைத்து உறுப்பு நாடுகளும் வேறு எந்த நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு அல்லது அரசியல் சுதந்திரத்திற்கு எதிராக அச்சுறுத்தல் அல்லது சக்தியைப் பயன்படுத்தக் கூடாது என்று கூறும் ஐ.நா. சாசனத்திற்கும் இது எதிரானது.

2011-ம் ஆண்டு பாகிஸ்தானில் அல்-கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனை அமெரிக்கா கொன்றது.

பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, ஈராக்கில் ட்ரோன் தாக்குதலில் ஈரான் ஜெனரல் காசிம் சுலேமானியை அமெரிக்கா கொன்றது.

பல 'பாலஸ்தீன தீவிரவாதிகளை" இதே போல் குறிவைத்துத் தாக்கி அழித்ததாக இஸ்ரேலும் ஒப்புக் கொண்டுள்ளது.

ஈரானின் அணு விஞ்ஞானிகளை கொன்றதாகவும் இஸ்ரேல் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஒரு நாட்டிற்கு அதன் 'எதிரிகளை" அல்லது 'தீவிரவாத தாக்குதல் நடத்துபவர்களை" கொல்லும் உரிமை உண்டு என்று கூறி இதுபோன்ற கொலைகளை நியாயப்படுத்த முடியுமா?

**'குறிவைத்து கொலை செய்வதற்கு' ஆதரவாகவும் எதிராகவும் வாதங்கள்**

ஆயுதமேந்திய மோதலின் போது 'எதிரியை" கொல்ல தங்களுக்கு உரிமை உண்டு என்று உலகின் பல நாடுகள் ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

பின் லேடன் மற்றும் சுலைமானி இருவரும் கொல்லப்பட்ட நேரத்தில், 'அவர்கள் தனக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றனர்" என்று அமெரிக்கா வாதிட்டது.

அதனால் தற்காப்புக்காக அவர்களைக் கொன்றதாக அமெரிக்கா தெரிவித்தது. இது சர்வதேச சட்டத்தின் கீழ் செல்லுபடியாகும்.

ஆனால் இத்தகைய கொலைகளை எதிர்ப்பவர்கள் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கூற்றுப்படி, இத்தகைய கொலைகளை நியாயப்படுத்த முடியாது. ஏனென்றால் குறிவைத்துக் கொல்லப்பட்டவர்களுக்கு சட்டப்படி, நீதிமன்றத்தில் தங்களை தற்காத்துக் கொள்ள வாய்ப்பு வழங்கப்படவில்லை என வாதிடப்படுகிறது.

அமெரிக்க சிவில் லிபர்டீஸ் யூனியனின் இணையதளத்தின்படி, உறுதியான, தீவிரமான மற்றும் உடனடி அச்சுறுத்தலுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியமின்றி, அமெரிக்க அரசியலமைப்பு மற்றும் சர்வதேச சட்டங்கள் ஆயுத மோதல் மண்டலத்திற்கு வெளியே அமெரிக்கப் படையை பயன்படுத்த அனுமதிப்பதில்லை.

அந்தச் சட்டத்தின் படி, 'ஆயுதக் குழுக்களுக்கு எதிரான ஆயுத மோதல்களின் போது கூட, அமெரிக்காவிற்கு எதிரான நேரடி விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக மட்டுமே அமெரிக்க அரசு தனது ராணுவ சக்தியைப் பயன்படுத்தலாம்."

'அரசு ராணுவ சக்தியைப் பயன்படுத்தும் போதெல்லாம், அருகிலுள்ள குடிமக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். ஆனால் அமெரிக்காவில், நிர்வாக அனுமதியுடன் அத்தகைய சக்தியைப் பயன்படுத்தும் போது இந்த தரநிலைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை."

பாகிஸ்தான், சோமாலியா, ஏமன் மற்றும் பிற இடங்களில் அமெரிக்கா இத்தகைய சட்டவிரோத "குறிவைத்து கொலை செய்யும்" சம்பவங்களை நடத்தியதாக அந்த இணையதளம் கூறுகிறது. அரசியலமைப்பு மற்றும் சர்வதேச சட்டங்களை மீறும் வகையில் அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அதற்கு பொறுப்பேற்கும் நிலை ஏற்படும்.

சர்வதேச சட்ட நிபுணர்களின் கூற்றுப்படி, கனடா இந்தியா மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ள போதிலும், இதுவரை எந்த ஆதாரத்தையும் முன்வைக்கவில்லை. அத்தகைய சூழ்நிலையில், கனடாவின் வாதம் வலுவற்றதாகிவிடுகிறது.

இந்த விவகாரத்தை கனடா சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லலாம், அங்கே வழக்கு தொடரலாம் என்று பல நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். ஆனால் அங்கும் கனடாவுக்குச் சாதகமாக முடிவு வர வாய்ப்பில்லை என்று தெரிகிறது. இதனால் இந்தியாவுக்கு சிக்கல் எழ வாய்ப்பில்லை, இந்தியாவுக்கு எந்த நெருக்கடியும் வராது என்றே நிபுணர்கள் கூறுகின்றனர்.




இரு நாடுகளுக்கு இடையே ஆயுத மோதல்கள் நடக்கும் போது அந்த வழக்குகளில் சர்வதேச நீதிமன்றம் முடிவு எடுப்பதில்லை என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

அல் ஜசீரா கூற்றின்படி, நிஜ்ஜாரின் கொலையில் இந்திய ஏஜென்சிகளின் தொடர்பு இருப்பதற்கான ஆதாரம் இருந்தால், அது சர்வதேச சட்டத்திற்கு எதிரானதாக கருதப்படலாம் என்று சர்வதேச சட்டப் பேராசிரியர் மார்கோ மிலானோவிக் கூறினார். ஆனால் கனடாவின் தற்போதைய குற்றச்சாட்டு சர்வதேச நீதிமன்றத்திற்கு செல்வதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு.

சர்வதேச நீதிமன்றத்தில் இதுபோன்ற நாடுகளுக்கு இடையேயான சர்ச்சைகள் தொடர்பான வழக்குகள் மிகக் குறைவாகவே விசாரிக்கப்படுகின்றன என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கோட்பாட்டளவில், சர்வதேச நீதிமன்றம் (ஐக்கிய நாடுகள் சபையின் முதன்மை நீதித்துறை அமைப்பு) எந்த வழக்கையும் விசாரிக்க முடியும் (எந்தவொரு நாடும் ஒரு நபரைக் கொலை செய்யும் வழக்கும் இதில் அடங்கும்.)

(16ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு



# எமது ஒற்றுமை சீர்குலைக்கப்படுமானால் கிழக்கில் தமிழர்களின் நிலை மோசமாகும்

## எச்சரிக்கிறார் கலையரசன் எம்.பி.



*அம்பாறை, செப். 26*

எந்த சந்தர்ப்பத்திலும் எமது ஒற்றுமை சீர்குலையக் கூடாது என்று கருதுபவன் நான். ஏனெனில் அவ்வாறு ஒற்றுமை சீர்குலைக்கப்படுமானால் கிழக்கில் தமிழர்களின் நிலை மோசமாகும். அதிலும் அதிகம் பாதிக்கப்படப் போகின்ற மாவட்டங்களாக அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களே இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ளவேண்டும் என அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

பாண்டிருப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் தமிழ் மக்களைப் பெருத்தவரையில் ஒற்றுமை என்ற விடயத்தில் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கின்றோம். அரசியல்வாதிகளிடமும் இல்லை, மக்களிடமும் இல்லை என்ற ரீதியில் அழிவின் விழிம்பில் நின்றுகொண்டிருக்கின்றோம். இந்தியாவில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக இருக்கின்றார்கள். புலம்பெயர் தேசங்களிலே இலங்கைத் தமிழர்கள் சுமார் இருபது இலட்சம் பேர் வரை வாழ்கின்றார்கள். இந்த நிலையில் இங்கு எமது எதிர்காலம் எங்கே போய் முடியும். கிழக்கு மாகாணத்திலே விகிதாசாரத்தில் முஸ்லீம்கள் மார்தட்டிப் பேசுகின்றார்கள். இந்நிலை நீடித்தால் எதிர்காலத்தில் கிழக்கு மண் எமது கைகளில் இருந்து விடுபடக் கூடிய வாய்பப்புதான் இருக்கின்றது.

தமிழ் மக்களாகிய நாங்கள எவ்வாறு இந்த நாட்டில் வாழப்போகின்றோம் எமது மக்களுக்கான தீர்வு என்ன என்ற விடயத்திலே நாங்கள் தொடர்ச்சியாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எதிர்காலத்திலும் ஒருமித்துச் செயற்படும். அந்த ஒற்றுமையை நாங்கள் பலப்படுத்துவோம். எந்த சந்தர்ப்பத்திலும் அந்த ஒற்றுமை சீர்குலையக்கூடாது என்று கருதுபவன் நான். ஏனெனில் அவ்வாறு அந்த ஒற்றுமை சீர்குலைக்கப்படுமானால் கிழக்கில் தமிழ் மக்கள் பெரும் பாதிப்பினை எதிர்கொள்வார்கள். அதிலும் அதிகம் பாதிக்கப்படப் போகின்ற மாவட்டங்களாக அம்பாறை திருகோணமலை மாவட்டங்களே இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ளவேண்டும்.

தேர்தல் முறைமை காரணமாக சில சில நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த அடிப்படையில் எம்முடன் இணைந்திருந்த கட்சிகள் புதிய கட்சியொன்றை அமைத்திருக்கின்றார்கள். அது நீடிக்கப் போகின்ற விடயம் அல்ல. மீளவும் நாங்கள் கூட்டாக ஒற்றுமையாகச் செயற்படுவோம். அவ்வாறில்லாவிட்டால் கிழக்கில் தமிழ் மக்களே மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவோம் -என்றார். (அ)

## இந்தியா VS கனடா - நிஜ்ஜார் கொலை:...

(15ம் பக்கத தொடர்ச்சி)

எது எப்படி என்றாலும், இந்த நீதிமன்றத்தின் அதிகார வரம்பு காமன்வெல்த் உறுப்பு நாடுகளுக்கு இடையில் செல்லாது என்று இந்தியா மற்றும் கனடா ஆகிய இரண்டும் அறிவித்துள்ளன.

**“ஃபைவ் ஐஸ்” கூட்டணி மற்றும் கொலை விசாரணை**

“ஃபைவ் ஐஸ்” இன்டலிஜென்ஸ் கூட்டணியில் கனடாவும் உறுப்பினராக உள்ளது.

இந்த கூட்டணியில் பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் கனடா ஆகியவை அடங்கும்.

காலிஸ்தானி ஆதரவாளர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் ஜூன் 18 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்கு முன்பே அவரது உயிருக்கு ஆபத்து இருப்பதாக கனடா பாதுகாப்பு உளவுத்துறை எச்சரித்ததாக கூறப்படுகிறது.

கனடாவின் தேசிய பாதுகாப்பு மற்றும் உளவுத்துறை ஆலோசகர் ஜோடி தாமஸ் ஆகஸ்ட் மாதத்தில் நான்கு நாட்களும், செப்டம்பரில் ஐந்து நாட்களும் இந்தியாவில் இருந்தார்.

கனடாவின் பிரதமர் ட்ரூடோ, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை கூட்டத்தில் பங்கேற்ற பின்னர், இந்த விஷயத்தை பாராளுமன்றத்தில் மிகத் தீவிரமாக எழுப்புவதற்கான முடிவை எடுத்ததாகக் கூறினார்.

தற்போது தமது அரசாங்கம் அதற்கான ஆதாரங்களை வெளியிடவில்லை எனவும், சட்ட நடவடிக்கையின் போது இந்த ஆதாரங்கள் வெளிவரலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உளவுத்துறை அறிக்கைகள் குறித்து கனடா துணைப் பிரதமர் கிறிஸ்டியா ஃப்ரீலாண்டிடம் கேட்கப்பட்டபோது, விசாரணை மற்றும் கனடாவின் ‘ஃபைவ் ஐஸ்” நட்பு நாடுகளுக்கான பொறுப்பை தன்னால் வெளிப்படையாகத் தெரிவிக்க முடியாது என்று கூறினார்.





